விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 19 சனிக்கிழமை (01.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கைக்கு எதிரான பிரேரணை இம்முறை வலுவானதாக இருக்கும்

## கூட்டமைப்பிடம் அமெரிக்கா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை அரசின் மீது சுயாதீனமான, பக்கசார்பற்ற சர்வதேச விசாரணை அத்தியாவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இம்முறை ஐ.நா. அமர்வில் இலங்கைக்கு எதிராக வலுவான பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாகவும் உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம்ஒன்றைமேற்கொண்டு நேற்று பிற்பகல் கொழும்பை வந்தடைந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியபிராந்

19 ஆம் பக்கம் பார்க்க..

# இலங்கையின் விடயத்தில் மூக்கை நுழைக்கும் அமெரிக்கா



## சுட்டிக்காட்டினார் பீரிஸ்

ரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களு... கான உதவி வெளியுறவுச் செயலர் நிஷா பிஸ்வாலிட... இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்... நிலைப்பு... ...ர்.

...சூழலில் ...ந்தர்ப்பத்தை

19 ஆம் பக்கம் பார்க்க..

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ...மெரிக்காவின் செயற்பா... ...ள் அடுத்தவர் விடயத்தி... ...மூக்கை நுழைப்பதாகவும், ...போதனை செய்வதாகவும் இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று நாள் விஜயமாக, ...லங்கை வந்துள்ள அமெ

## ...ழக்கு ஆயர்களை ...க ஜனாதிபதி திட்டம்

(...பாணம்)

யா...ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆயர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளதாக அரசாங்க தகவல்கள் கூறுகின்றன. வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து ஆயர்களுடன் கலந்துரையாட ஜனாதிபதி விரும்புவதாகவும் அதற்கான அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி செயலக தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு தொடர்பாக கருத்து வெளியிட மறுத்த யாழ் ஆயர் இல்ல வட்டாரங்கள் ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடருக்கு முன்னதாக இடம்பெறும் சந்திப்புக்களில் ஆயர்கள் கலந்துகொள்வது சாத்தியமில்லை என கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னர் வடக்கு கிழக்கில் சமூக பிரமுகர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்க விரும்புவதாக கூறப்படுகின்றது. (எ-11)

## ...லிகளுக்காக ...ஜ.வி.பியா?

(கொழும்பு)

ஜே.வி.பி. நல்ல முன் ...ற்றமடைந்த கட்சியாக ...றியுள்ளதுடன் தற்போது ...தலைப் புலிகளுக்கான ...ரிகளை மேற்கொண்டு ...வதாக அமைச்சர் விமல் ...வன்ஸ தெரிவித்தார்.

...பொலநறுவை பிரதேசத் ... நடைபெற்ற வைபவம் ...றில் உரையாற்றும்போதே ...ர் இதனை குறிப்பிட் ... அவர் மேலும் தெரி ...கையில்.

...மன்னார் மனித புதை ...யில் இருந்து கிடைத்த ...த எலும்புக் கூடுகள் ...டர்பில் முழுமையான ...ரணைகள் நடத்தப்பட ...ண்டும் என ஜே.வி.பி ...றியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்ட...ப்பு அவ்வாறு கூறியிருந் ... அதில் அர்த்தமுள்ளது. ...ளால் ...ர நடை

20 ஆம் பக்கம் பார்க்க..

## உறுதிமொழிகளை நிறைவேற்ற ஜனாதிபதி தவறிவிட்டார் - சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்ல சந்தர்ப்பத்தை ஏற் படுத்திக் கொடுப் ...

19 ஆம் பக்கம் பார்க்க..

# அமைச்சர் பசிலை நேற்று சந்தித்தார் நிஷா தேசாய்!

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்... ஆசிய விவகாரங்களுக்... ...தவி இராஜாங்க செய...ல...ர் நிஷா தேசாய் பிஸ்வால், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன போது அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர், அமைச்சருடன் விடயங்களை பரிமாறிக் கொண்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடகப் பரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ள பிஸ்வால், அரசாங்கத்தின் உயர்மட்டத் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார். அதன் ஒரு கட்டமாகவே அவர் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தார்.

அமைச்சருடன் இந்த சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிசேல் சீசென், வடக்கு மாகாண மீள்குடியேற்ற, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ்.பி.திவாரட்ன உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ-11)

# கடும்போக்குவாதத்தை நோக்கி தள்ளப்படும் வடக்கு முதலமைச்சர்

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கடும்போக்குவாதத்தை நோக்கித் தள்ளுவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபையை பாதுகாப்பதற்கு பதிலாக அரசாங்கம் முதலமைச்சரை கடும போக்குவாதத்தை நோக்கி நகர்த்தி வருவதாகக் குற்றம்



சுமத்தியுள்ளார். தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உரிய தீர்வுத் திட்டங்களை வழங்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த காரணத்தினாலேயே வட மாகாணசபையில் சர்வதேச யுத்தக் குற்றச் செயல் விசாரணை உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என அவர் சுட்

20 ஆம் பக்கம் பார்க்க..

# மன்னார் மனிதப் புதைகுழி தோண்டும் பணி ஒத்திவைப்பு

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் 5 நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை 19 ஆவது தடவையாக குறித்த மனித புதை குழி தோண்டப்பட்டது. எனினும் எவ்வித மனித எச்சங்களும் மீட்கப்படவில்லை.

அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண தலைமையில் அகழ்வுப்பணிகள் இடம் பெற்றது.

இந்த நிலையில் மன்னார் நீதவானின் உத்தரவிற்க

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஆவா குழு வழக்கு 9 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸார் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத காரணத்தினால் ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என கருதப்படும் 9 பேருக்கு யாழ்.நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

பிரதான சந்தேக நபர்கள் என கருதப்படுகின்ற ஆவா குழுவின் தலைவர் உட்பட மூவருக்கு எதிர் வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆவா குழுவினர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் நீதவான் சிவகுமார் முன்னிலையில் எடுத்துக்

20 ஆம் பக்கம் பார்க்க..

மின் சீராக்கல் கட்டணம் நீக்கப்படும்
செய்திகள் பக்கம் 10



இலங்கை அணி அபார வெற்றி
விளையாட்டு பக்கம் 18

இந்திய - சவுதி ஒப்பந்தம்
செய்திகள் பக்கம் 14

ஜெனிவா அழைப்பை தவிர்த்தார் கம்லத்
செய்திகள் பக்கம் 15

சர்வதேச விசாரணையே சுயாதீனமாக அமையும்
செய்திகள் பக்கம் 05

இலங்கை மத்திய வங்கி வடபிராந்தியத்தின் முன்மாதிரி
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவுகளை கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் இரவு நேர ரோந்தில்

## யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுத்தினரின் நோக்கம் மக்களுக்கு சேவை செய்வதும் மக்களைப் பாதுகாப்பதும் தான் என யாழ்.மாவட்ட இராண்ுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தள்ளார்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு தனது சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் செய்வதற்கு தான் தயாராக உள்ளதுடன், பிரச்சினைகள் இருப்பின் அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுத் தருவதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா தெரிவித்தார்.

யாழ். பலாலி படைமுகாமில் கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதிக்கும் யாழ். வலிகாமம் கிழக்கு விவசாயிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் தேவைகள் குறித்து என்னுடன் வெளிப்படையாக பேசுவதை நான் விரும்புகின்றேன்.

இராணுவத்தினரின் நோக்கம் மக்களுக்கு சேவை செய்வதும் மக்களைப் பாதுகாப்பதும் ஆகும். தற்பொழுது இராணுவ முகாம்களை அகற்றி மக்களுடைய வீடுகளையும் விவசாய நிலங்களையும் ஒப்படைத்து வருகிறோம்.

இராணுவத்தினர் அகற்றப்பட்டவுடன் களவுகள் இடம்பெறுவதாக மக்கள் எமக்கு தெரிவிக்கின்றார்கள். அது சிவில் நிர்வாகப் பிரச்சினை. அதனைப் பார்க்க வேண்டியது பொலிஸார். இருந்தும், நாங்கள் இராணுவத்தை இரவு வேளைகளில் வீதி ரோந்துகளில் ஈடுபடுத்தியுள்ளோம்.

விவசாயிகளின் உற்பத்திகளை சந்தையில் விற்பனை செய்வதற்கும் இராணுவத்தினர் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையில விற்பனை செய்யாமல இருப்பதற்கும்நடவடிக்கை எடுத்துள்ளோம். இராணுவத்தினருக்கு தேவையான பொருட்களை மக்களிடம் பெற்று அதில் பயனபெறவேண்டும்

இந்த நிலையில், உடனடியாக 300 லீற்றர் பசுப்பாலை 60 ரூபா படியும் முட்டைகள், இறைச்சி, கோழிகள் ஆகியவற்றில் 75 சதவீதமானவற்றை கொள்வனவு செய்வதற்கு தயாராக உள்ளோம். மேலும்,10 சலவைத் தொழிலாளிகளும் 20 சிகை அலங்காரத் தொழிலாளிகளும் எமக்கு தேவையாக உள்ளார்கள். இவை அனைத்தையும் நாம் தமிழ் மக்களிடம் இருந்தே எதிர்பார்க்கி றோம்.

டெங்கு ஒழிப்பு, பார்த்தீனிய ஒழிப்பு ஆகியவற்றை விவசாய அமைப்புக்களுடனும் பொது அமைப்புப் பிரதிநிதிகளுடனும் இணைந்து மேற்கொள்ள இராணுவத்தினர் தயாராக இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


## சுகவாழ்வுக்கான பயணம்

### சுகாதாரப் பராமரிப்பாளர் சேவைகள்

பயிற்றப்பட்ட பரிசாகர்களால்
இரவு / பகல் சேவைகள்
குறைந்த கட்டணத்தில்
வழங்கப்படும்.



தொடர்புகளுக்கு:
சுகவாழ்வுக்கான பயணம்,
அன்னசத்திர ஒழுங்கை,
பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 373 4618
(5480)



உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?

மு.ப. 9.00-பி.ப. 1.00
வரை அழையுங்கள்
021 222 8117

கைகொடுக்கும் நண்பர்கள்
(இரகசியம் பேணப்படும்)
(சி-6359)




## விற்பனைக்கு

7 நீளம் 4' அகலமுடைய இரும்பு கேற்-1, வீல் சைக்கிள்-1, உடற்பயிற்சி சைக்கிள்-1, பிறேக் உள்ள சைக்கிள்-1 (நடக்க முடியாதவர்கள் பயன்படுத்தும் சைக்கிள்) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0771880017


## மரண அறிவித்தல்

### அமரர் கொண்டு சண்முகம்



சாவகச்சேரி தேவாலய வீதியை வசிப்பிடமாகக் கொண்ட கொண்டு சண்முகம் 31.01.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், சதீஸ்குமார் (சீதா ஜுவலறி-சாவகச்சேரி), சுரேஸ்குமார், நாகநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரனின் அன்பு மாமனாரும் ஜனுஸ்கா, மினோசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2014 ஞாயிறு காலை 10 மணிக்கு சாவகச்சேரி தேவாலய வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவாலய வீதி,
டச்சு றோட், சாவகச்சேரி. (சி-6392) தகவல்:குடும்பத்தினர்.

## ...1 - ம் நாள் நினைவஞ்சலியும் ...நவிலலும்

...ரர்
...பொன்னம்மா



பிறப்பு 01.04.1927
இறப்பு 02.01.2014

கண்... மணிகள் அறுவரையும்
கண்... றலாது கண்ணிமையாய்
காத்த கதை
உளமது நோகாமல் உரைத்திடும்
வார்த்தையோடு
உறவினர்கள், ஊரவர்கள் அனைவரையும்
உபசரித்து வாழ்ந்த கதை
அத்தனையும் அரை நொடியில் பொய்யாகிப்
போனதென்ன?
அம்மா என்றழைத்து அறுதலைத் தேட
எப்போ வருவீர்கள் எம்மருகில்
எம் உயிரே எம் தாயே...

02.02.2014 ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் Email,Facebook மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் பத்திரிகை, துண்டுப் பிரசுரம், பதாகை ஆகியவற்றின் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் தேவையான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியை தெரிவிக்கின்றோம்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.
சிரேஷ்ட புத்திரன்
சி.கணேசமூர்த்தி
(சி-6390)



## மணிவிழா வாழ்த்து

திரு.
### கயித்தான் பேர்ணாட்
(பீடாதிபதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி)

கல்வித்துறையில்
மூன்று தசாப்தம் கடந்து
கருமமாற்றிய - எம்
கல்லூரியின் மணிவிழா நாயகனே
உம் சேவைகள் மேலும் தொடர
வாய்மை நிறைந்த மனதுடன்
வளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 2011 - 2013 ...
(5479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அலெக்சாண்டர் டூமாஸ்

பாரிசிலே ஓர் எழுத்தாளர்.

அவர் எப்போதும் எழுதிக்கொண்டே இருப்பார். நண்பர்கள் யாராவது பார்ப்பதற்கு வந்தால் கூட ஒரு கையை அவர்களுக்காக அசைத்துக்கொண்டே இன்னொரு கையாலே எழுதிக்கொண்டே இருப்பார்.

ஒரு நாள் அவர் தன்னுடைய அறையினுள்ளே உட்கார்ந்து எழுதிக் கொண்டே இருந்தார். வெளியே ஓர் நபர் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு உதவியாக! அந்த எழுத்தாளரைத் தேடி அவருடைய நண்பர் ஒருத்தர் வந்து சேர்ந்தார். அவர் வந்த நேரத்திலே அறைக்குள்ளேயிருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது.

வந்தவர் அந்த உதவியாளரிடம் "என்ன இது? அறையினுள் சிரிக்கின்ற சத்தம் கேட்கிறது? அவரிடம் யாரோ பேசிக்கொண்டிருக்கிறார்கள் போல் இருக்கின்றது. நான் பின்பு வந்து இவரைப் பார்க்கின்றேன்" என்று கூறிவிட்டு சென்றார்.

அதற்கு அந்த நபர் "ஐயோ, அதெல்லாம் இல்லை! அவர் தனியாகத்தான் இருக்கின்றார்! அவர் தன்னுடைய கதையில் வருகின்ற கதாபாத்திரங்களோடுதான் இப்படி சிரித்துப் பேசிக் கொண்டிருக்கின்றார்!" என்று கூறிவிட்டு வந்தவரை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

உள்ளே போய் பார்த்தால்... அப்படித்தான்! அவர்... ஒரு மாதிரியாக தனியாகவே பேசுகிறார், சிரிக்கிறார்!

வந்தவருக்கு முன்பே விடயம் தெரிந்ததனாலே அவர் பயப்பட வில்லை! அதிர்ச்சி அடையவில்லை?

அது சரி? இப்படிப்பட்ட அந்த எழுத்தாளர் யாரென்று நினைக்கிறீர்கள்?

அவர் தான்... அலெக்சாண்டர்டூமாஸ்!

பிரஞ்சு தேசத்தின் பிரபலமான நாவலாசிரியர்.

"மூன்று வீரர்கள்", "மண்டி கிறிஸ்தோபின் பிரபு" இதுமாதிரி பல நாவல்களையும் நாடகங்களையும் எழுதியவர். அவர் எழுதியதெல்லாம் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

அவையெல்லாம் இன்றும் இறவா புகழோடு இருந்து கொண்டிருக்கிறன.

'கிறிஸ்டின் ராணி' என்ற நாடகத்தை அவர் எழுதினார். ஒரு நாடகக்குழு அதை மேடையிலே நடிப்பதற்காக வாங்கினார்கள்... ஒத்திகையெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது... நாடகம் பெரிய வெற்றி என்று ஒத்திகையை பார்த்தவர்களெல்லாம் சொன்னார்கள்.

அந்தச் சமயத்திலேதான் ஒரு விடயம் தெரிய வந்தது... அதாவது... அதே கதையை இன்னொரு வயதான எழுத்தாளரும் நாடகமாக்கியிருந்தார் என்ற விடயம்! அவர் வறுமையிலே வாடிக் கொண்டிருந்தார். தன்னுடைய ஒரு நாடகத்தை யாராவது பாரிஸ் மேடைகளிலே ஏற்றி விட வேண்டும் என்று ஏங்கிக்கொண்டிருந்தார்.

டூமாஸுக்கு இந்த விடயம் தெரிந்தது! உடனே மேடை ஏற இருந்த தன்னுடைய நாடகத்தை திரும்ப வாங்கிக் கொண்டார். நாடகம் நடத்துகின்ற உரிமையை அந்த முதிய எழுத்தாளருக்கே விட்டுக் கொடுத்தார்.

"மூன்றாம் ஹென்றி" –டூமாஸ் எழுதிய நாடகம்.

மக்கள் மத்தியிலே அதற்கு மகத்தான வரவேற்பு.

ஒரு நாள் அவருடைய நண்பர் ஒருவர் அவரைப் பார்த்துக் கேட்டார். "நீங்கள் எப்படி கதைகளை உருவாக்குகிறீர்கள்?"

"நான் கதைகளை உருவாக்குவதில்லை! அதெல்லாம் தானாகவே எனக்குள்ளே உருவாகிறது!" என்றார் இவர்.

"அது எப்படி முடியும்?" என்றார் அவர். "அது எப்படியோ எனக்குத் தெரியாது! ஒரு ப்ளம் மரத்திடம் போய் அது எப்படி பழங்களைக் கொடுகின்றது என்று கேளுங்கள்!" என்றார் இவர்! அதுதான் அலெக்சாண்டர் டூமாஸ்!

அவர் ஏராளமாக சம்பாதித்தார். அதையெல்லாம் தாரளமாக செலவழித்தார். பல நண்பர்கள் அவருக்கு. அவருடைய மாளிகைக் கதவுகளை நண்பர்களுக்காக திறந்தே வைத்திருந்தார். அடிக்கடி விருந்துகள் நடக்கும் எல்லோரும் வாருங்கள்... அழைத்து வருகின்ற விருந்தாளிகளும் உண்டு... அழைக்காமலே வருகின்றவர்களும் உண்டு. அதையெல்லாம் இவர் கண்டுகொள்ளமாட்டார்.

ஒரு தடவை அப்படித்தான்.... விருந்து நடந்து கொண்டிருக்கின்றது! யாரோ ஒருவர் மும்முரமாய் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்றார்.

ஒரு நண்பர் டூமா(ஸ்) இடம் வந்தார். "அதோ பெரிய மனிதன் மும்முரமாக சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றரே. அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வையுங்கள்!" என்றார்.

"அது என்னாலே முடியாது!" என்றார் இவர்.

"ஏன்?" என்று கேட்டார்.

'ஏன் என்றால்... என்னையே இன்னும் அவரிடம் அறிமுகப் படுத்தி வைக்கவில்லையே!'

இது எப்படி இருக்கின்றது! அவர் இப்படி மிகவும் தாராளமாக இருந்ததனாலேயே அவருக்கு கடன் அதிகமாகிப் போய்விட்டது! கோர்ட்டு அமினாக்கள் எல்லாம் அடிக்கடி அவருடைய வீட்டுக்கு வந்து கொண்டு இருந்தார்கள். கடன்காரர்கள் என்றாலே அவருக்கு கோபம் வரும்.

ஒரு நாள் ஒருவர் டூமாஸைத் தேடிவந்தார். ஒரு ஆசாமி இறந்து போனார். அவரை அடக்கம் செய்வதற்கு நன்கொடையாக ஒரு 15 பிராங்கு கொடுங்கள்" என்று கேட்டார்.

அது அந்த ஊர்க்காசு! இறந்து போனது யார் என்று கேட்டார் இவர்.

ஒரு கடன்காரர் என்றார் அவர்.

அவர் கேட்டது 15 பிராங்கு! அவர் 30 பிராங்கு கொடுத்தார்.

ஏன் என்று கேட்டார் அவர்.

இன்னொரு கடன்காரரையும் சேர்த்து அடக்கம் செய்யுங்கள் என்றார் இவர்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்திய மீனவர்கள் 38 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## தமிழக முதல்வர் மன்மோகனுக்கு கடிதம்

இலங்கைக் கற்படையினரால் கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 38 இந்திய மீனவர்களை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் செய்த ஏற்பாட்டின்படி தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே கடந்த 27ஆம் திகதியன்று சென்னையில் நேரடி பேச்சுவார்த்தை நடைபெற்றதை நீங்கள் அறிவீர்கள். அந்த பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இணக்கம் காரணமாக கடந்த 2 வாரங்களில் 295 தமிழக மீனவர்களை அவர்களது 45 படகுகளுடன் சிறைகளில் இருந்து இலங்கை அரசு விடுவித்தது.

என்றாலும் அந்த நல்லெண்ண சூழ்நிலை கடந்த 29 ஆம் திகதி நடந்த சம்பவம் மூலம முற்றிலுமாக சீர்குலைக்கப்பட்டுள்ளது. அன்றிரவு பாக்கு நீரிணைப் பகுதியில் மீன்பிடிக்க சென்றிருந்த தமிழக மீனவர்கள் 38 பேரை கைது செய்து இத்தகைய சூழ்நிலையை இலங்கை ஏற்படுத்தியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 38 மீனவர்கள் கடந்த 29ஆம் திகதியன்று இரவு தங்கள் பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பாக்கு நீரிணை கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கை கடற்படை அவர்கள் 38 பேரையும் 6 எந்திரப் படகுகளுடன் கைது செய்துள்ளது.

சமீபத்தில் இரு நாட்டு மீனவ சமூதாயத்தினரை பேச வைத்து, ஒரு சுமுகமான சூழ் நிலையை ஏற்படுத்தி இருந்த நிலையில், அதை சீர்குலைக்கும் வகையில் 38 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய கட்த்தல் மற்றும் கைது நடவடிக்கைகள் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிக்கும்.

இரு நாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்தப்பட்ட சுமுக சூழ்நிலையை பாதுகாக்கவும், தமிழக மீனவர்களின் தினசரி மீன்பிடி தொழில் தொடர்வதற்கு தீர்வுகாணவும், அப்பாவி இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி கடத்தல் செயல்களில் ஈடுபடக்கூடாது என்று இலங்கையிடம் தாங்கள் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இலங்கை கடற்படையின் அத்துமீறல்களுக்கு கடும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

மேலும் இலங்கை தன் கடற்படையிடம் சட்டவிரோதமாக அப்பாவி தமிழக மீனவர்களை கைது செய்யக் கூடாது என்று உத்தரவிட தாங்கள் வலியுறுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, தூதரக அளவில தொடர்பு கொண்டு 29ஆம் திகதியன்று 6 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 38 தமிழக மீனவர்களை உடனே விடுவிக்க ஏற்பாடு செய்ய வேணடும் என்று கேட்டுக் கொள் கிறேன் என அந்த கடிதத்தில் அவர் கூறியுள்ளார். (அ-2)

# இராசி பலன்

*01.02.2014*
*(தை 19, சனிக்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*துதியை நள்ளிரவு 12.01 மணிவரை*
*அவிட்டம் பிற்பகல் 1.43 மணிவரை*
*இராகுகாலம் 9.36-11.06 மணிவரை*
*சுபநேரம் 3.36-5.06 மணிவரை*
*சித்தாமிர்தம்*

**மேடம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், வளமான வாழ்வுக்கு வழி சமைத்துக் கொள்வீர்கள், குடும்பத்தில் உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், போசன நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, தேகநலன் முன்னேற்றம் தரும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** தொழிலில் சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், எதிர்பாராத பயணங்கள் தித்திக்க வைக்கும், சிலருக்கு கட்டுப்படும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சௌக்கிய விருத்தியுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், சயன சுகமான நாள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும்.

**கன்னி** விரும்பிய பொருளொன்றை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பகைவர்கள் விலகுவர், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**துலாம்** பணக்குறைவுண்டு, அஜீரணம் சம்பந்தமான சில ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், சத்துரு பயமுண்டு.

**விருச்சிகம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், ரோக நிலையுண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** மனோதைரியம் கூடும், இஷ்ட சித்தியுண்டு, உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவ முன்வரலாம், அந்நியர் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மகரம்** தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மனோ சங்கடமுண்டு.

**கும்பம்** வருமானங்கள் அதிகரிக்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், சயன சுகமுண்டு, பெரியோர் ஆதரவுண்டு, முயற்சிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 80 |
| தக்காளி | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 50 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 20 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 70 |
| பாகற்காய் | 160 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 70 | 60 |
| கறிமிளகாய் | 120 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 500 | – | 400 |
| போஞ்சி | 50 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 20 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 30-40 |
| இராசவள்ளி | 50 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சந்தை கட்டடத்தின் கீழ் பகுதியில் மரக்கறி சந்தை

## பொலிஸார் அனுமதி

(பருத்தித்துறை)


பருத்தித்துறை நகரசபை மரக்கறிச் சந்தை, சந்தைக் கட்டடத்தின் கீழ் பகுதியில் தற்காலிகமாக செயற்பட பொலிஸார் அனுமதி வழங்கியிருந்ததையடுத்து மேற்கு பக்கமாக சந்தை கீழ்ப் பகுதியில் செயற்பட்டு வருகிறது.

பருத்தித்துறை நகரசபை இச்சந்தையை மேல் மாடியில் இயங்க நடவடிக்கை எடுத்தது. எனினும் மரக்கறி வியாபாரிகள் அதனை ஏற்க மறுத்திருந்தனர்.

இதனையடுத்து பருத்தித்துறை நகர சபையினர் பொலிஸ் நிலையத்தில் இவ்விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்தனர்.


பொலிஸார் மரக்கறி வியாபாரிகளை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் பொலிஸார் இது விடயமாக நீதிமன்றின் தீர்ப்பு வரும்வரை எவருக்கும் இடைஞ்சல்கள் ஏற்படாத வகையில் கீழ் தளத்தில் மரக்கறிச் சந்தை இயங்க அனுமதித்துள்ளனர்.

மரக்கறி வியாபாரிகள் மேல் மாடியில் சந்தை வியாபாரம் செய்வதில் ஏற்படும் கஷ்ட நிலைகளை பொலிஸாருக்கு கலந்துரையாடலின் போது தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-10)



நன்றி:மிரர்

# குறுந்திரைப்பட வெளியீடு




ஜேர்சித்தனின் அப்பாவின் மிதிவண்டி குறுந்திரைப்பட வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30க்கு செல்வமஹால் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் துரைராஜா ஜீவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்லூரி அதிபர் வண. டி.எஸ்.சொலமன் அடிகள், நிறை வாழ்வு மைய இயக்குநர் தயாளினி தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் பங்குத் தந்தை ஜேம்ஸ் அடிகளார் ,யாழ்.பல் கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் க.ஞானபாஸ்கரன், ஹரிஹரணன் பிறின்டேர்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் சி.ராஜ்குமார், கௌரவ விருந்தினர்களாக செயற்றிறன் அரங்க இயக்குனர் தே.தேவானந், திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9)

# யாழ்.நீதிமன்ற கட்டடத்தில் நீதிபதிகளுக்கு செயலமர்வு



வடக்கு மாகாணத்திலுள்ள நீதிபதிகளுக்கான செயலமர்வு யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் காலை 10 நடைபெற்றது.

மாவட்டத்தின் உயர்நீதிமன்ற நீதிபதியும், நீதிமன்ற ஆணையாளருமான நீதிபதி பிரேம்சங்கர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நாட்டின் பிரதம நீதியரசர் மொஹன் பீரிஸ் மற்றும் அமெரிக்காவின் நீதிபதிகள் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, நாட்டின் சட்டங்கள் மற்றும் அதன் நடைமுறைகள் தொடர்பாக நீதிபதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

இதன்போது நாட்டின்சட்ட திட்டங்கள் மற்றும் மனிதாபிமான நடைமுறைகள் தொடர்பிலும் எடுத்துக் கூறப்பட்டன.

இந்த செயலமர்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பிரேம்சங்கர் மற்றும் மாவட்ட நீதிபதி உள்ளிட்ட மாவட்டத்தை மற்றும் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நீதிபதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# வலிகாமம் வலய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டனர்

(மானிப்பாய்)

வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ள 09 பாடசாலைக்களுக்கு கடந்த 23, 24 ஆம் திகதிகளில் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா அறிவித்துள்ளார்.

இதன்படி தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தின் கீழுள்ள தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு ம.மணிசேகரன், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்திற்கு த.தயானந்தன், அளவெட்டி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு வி.அருமைநாதன் அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு க.சிவபாலன் போன்றோர் நியமிக்கப்படடுள்ளனர்.

அத்தோடு சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்திற்கு ஜோசேப் எட்வேட் பங்கீராசு உடுவில் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு நா.தனபாலசிங்கம் உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலைக்கு இரா.ஜெயக் குமார், சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்திற்கு ரி.தனஞ்செயன், சங்கானைக் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்திற்கு கு.முருகானந்தன் நியமிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.(அ-9-23)




# இம்மாதம் 13 வரை மீனவர்களுக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்ட 38 இந்திய மீனவர்களை யும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிம ன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை பணிப்பாளர் என்.கணேஷமூர்த்தி தெரிவித்தார்.

இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 6 படகுகளில் வருகைதந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது குறித்த மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போதே நீதவான் இந்த உத்தரவினை பிறப்பித்தார் என நீரியல்வளத்துறைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வல்லை வீதியிலிருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன

பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் வல்லை பகுதியில் பல வருடங்களாக மூன்று இடங்களில் முகாமிட்டிருந்த இராணுவ முகாம்கள் முற்றாக மூடப்பட்டு விட்டன. குறிப்பாக 1996 ஆம் ஆண்டு முகாமிட்டிருந்த இந்த இராணுவ முகாம்களில் சோதனைகளும் இடம் பெற்றது. இம் முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

இப்பிரதான வீதியில் மண்டான் சந்தி வல்லைச்சந்தி, ஆவரங்கால், அச்சுவேலி சந்திகளில் நிலைகொண்ட இராணுவ முகாம்களே மூடப்பட்டுள்ளன.

வடமராட்சியில் கரவெட்டி பிரதேச சபை அலுவலகத்திற்கு முன்பாக இருந்த இராணுவ முகாமும் மூடப்பட்டுள்ளது. தனியார் வீடொன்றில் இருந்த இந்த முகாம் மூடப்பட்டதையடுத்து உரியவர்கள் வீட்டை பொறுப்பேற்றுள்ளனர். (அ-10)





க.பொ.த.உயர்தரத்தில் சாதனை படைத்த மாணவர்களினை கௌரவிக்கும் நிகழ்வு வடமாகாண கல்வியமைச்சில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின், என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைகளே சுயாதீனமாக அமையும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

**இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளே சுயாதீனமாக அமையும். ஜெனீவா தீர்மானங்களில் நாம் தமிழர்களுக்கு சாதகமான முடிவுகளை எதிர்பார்க்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தனிப்பட்ட யாரையும் நினைவு கூருவதற்கு அல்ல. ஒட்டுமொத்தமாக இறந்தவர்கள் அனைவரையும் நினைவு கூரவே எனவும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதே இன்று சர்வதேசத்தின் கேள்வியாக அமைந்துள்ளது.

இதில் இராணுவத்தினர் மற்றும் விடுதலைப்புலிகள் இருதரப்பினரும் போர்க்குற்றங்களை செய்துள்ளனர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் விசாரணைகளை நடத்துமாயின் அது பக்கச் சார்பானதாகவே அமையும். இராணுவத்தின் குற்றச்செயல்களை அரசாங்கம் மூடிமறைக்கக்கூடிய வாய்ப்புகளே அதிகமாகவுள்ளது.

எனவே, இவ் விடயத்தில் சுயாதீனமான செயற்பாடுகள் காணப்பட வேண்டும். உண்மை நிலைமையும் நியாயமான தீர்வும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பட வேண்டும். ஆகவேதான் நாம் தொடர்ந்தும் சர்வதேச விசாரணைகளை கோருகின்றோம்.

சர்வதேச விசாரணைகளை தடுப்பதற்காகவே அரசாங்கம் பொய்யான கருத்துக்களை முன்வைத்து எமது செயற்பாடுகளை தடுக்க முயற்சிக்கின்றது. உண்மையில் சர்வதேச விசாரணைகளினால் நாட்டிற்கு எவ்வித தீமைகளும் ஏற்படப் போவதில்லை.

இது பொதுமக்களை எவ்விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது நாட்டிற்கே நன்மையினை ஏற்படுத்தும். யுத்த குற்றங்களை மூடி மறைப்பதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதுமில்லை.

எனவே, ஜெனீவா தீர்மானங்களில் எமது மக்களுக்கு சார்பான தீர்ப்பினை எதிர்பார்க்கின்றோம்.

மேலும் முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி அமைப்பது தனியே விடுதலைப்புலிகளை நினைவுகூர மட்டுமல்ல இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைவரையும் நினைவுகூரவே நாம் இக் கோரிக்கையினை முன்வைத்துள்ளோம்.

கொல்லப்பட்ட அனைவரின் சார்பிலும் நாம் நியாயம் கேட்கின்றோம். இராணுவ யுத்தக்குற்றங்கள் அனைத்திற்கும் அரசாங்கம் பொய் ஆதாரங்கள் வைத்திருந்தாலும் உண்மையான சர்வதேச விசாரணைகள் எமக்கான சாதக மான முடிவுகளைத் தரும் என்றார். (அ-2)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பரத்தைப்புலம் கருணை மிகு ஸ்ரீகருணாகரப் பிள்ளையார் கோவில் மஹாகும்பாபிஷேகம் இம்மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதன் ஆரம்ப கிரியை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இம்மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜை, பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல், திருவீதியுலா என்பன இடம் பெறும். இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் 48 தினங்கள் நடைபெறும். (அ-2)

# மாதாந்த கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மாதாந்த அங்கத்தவர் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நெல்லியடி செவிப்புலனற்றோர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன் சி.முரளிகரன் கேட்டுள்ளார். (அ-10)

# இழப்புகளுக்கு மத்தியிலும் நாம் தலைநிமிர கல்வியே காரணம்

## வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

இழப்புகளுக்கு மத்தியிலும் நாம் தலை நிமிர்ந்து நிற்பதற்கு எமது கல்வியே காரணம் என வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

க.பொ.த. உயர் தரத்தில் 2013 ஆம் ஆண்டு சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண கல்வியமைச்சில் நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்வி என்பது எம் அனைவருக்கும் மிக முக்கியமான சொத்தாகும்.

நாம் இத்தனை இழப்புக்கள், கஷ்டங்களுக்கு மத்தியிலும் தலைநிமிர்ந்து நிற்பதற்கு எமது கல்விதான் காரணமாகும்.

வடமாகாணம் யுத்தத்தினாலும் பல காரணங்களினாலும் பல இன்னல்களை அனுபவித்த போதும் எமது மக்கள் கல்வியை கைவிடவில்லை.

3 ,பாடங்களிலும் சித்தி எய்தாத மாணவர்களின் எண்ணிக்கையில் வடக்கு மாகாணம் 8 ஆவது நிலையில் உள்ளதோடு பல்கலைக்கழகங்களில் தகுதி பெறும் மாணவர் எண்ணிக்கையில் முதல் நிலையிலுள்ளது.

13 ஆண்டுகள் கல்வி கற்று ஒரு பாடத்தில் 40 புள்ளிகளை பெறுவதற்கு ஒரு மாணவன் தவறி விட்டால் அதனை நாம் பாரதூரமான விடயமாகவே கருத வேண்டும்.

இதனை அதிபர்கள் ஆராய்ந்து உரிய முறையில் கல்வி புகட்ட வேண்டும்.

ஆசிரியர்கள், அதிபர்கள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் உயர்தரப் பரீட்சை மாணவர்கள் ஆர்வத்துடனும் விருப்புடனும் கல்வி கற்காவிட்டால் உரிய பெறுபேற்றை அடைய முடியாது.

மாணவரிடையே உயர்தர கல்வியில் ஆர்வத்தை அதிகரிக்க உயர்தரத்திற்கான பாடத் தெரிவுகள் முக்கியமானதாகும்.

வடக்கு மாகாணத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களில் அதி திறமைச் சித்தியில் தெரிவாகும் மாணவர்களை அதிகரிக்க வேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாதம் கல்வியமைச்சில் முக்கியமான ஒன்று நடைபெறவுள்ளது .அதில் மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் விசேடமாக வடக்கின் கல்வி நிலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது

நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எமது சமூகத்தின் முன்னேற்றம் கருதி பணியாற்ற வேண்டும்.

மாணவர்களை ஆசிரியர்கள் தமது பிள்ளைகளாக கருதி கல்வி புகட்ட வேண்டும்

சித்தியடைந்த மாணவர்கள்உயர்விற்கு காரணமாகவிருந்த இந்த மண்ணுக்கும் மக்களுக்குமே கடமையாற்ற வேண்டும் என்றார். (அ-4)

# விடுவிக்கப்பட்ட நபர் மீண்டும் கைதுசெய்யப்பட்டது ஏன்?

## உயர்நீதிமன்றம் கேள்வி

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர் சந்தேகத்தின் பேரில் புனர்வாழ்வு பயிற்சி வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபரை மீண்டும் கைது செய்தமை சம்பந்தமாக விபரங்களை முன்வைக்குமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தர விட்டுள்ளது.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தை சேர்ந்த குறித்த சந்தேக நபர் தாக்கல் செய்த மனுவொன்றை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட தன்னை, புனர்வாழ்வு பயிற்சிகளின் பின்னர் 2010ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட பின்னர், எவ்வித காரணமும் கூறப்படாமல் 2012ஆம் ஆண்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், அன்று முதல் எவ்விதமான விசாரணைகளும் இன்றி தன்னை விளக்கமறியலில் வைத்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதியரசர்கள், புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கி விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபர் எந்த காரணத்தின் அடிப்படையில் மீண்டும் கைது செய்யப்பட்டார் என அரச [illegible] கேள்வி எழுப்பினர். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 21 ½ செவ் 12 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: A/L / வெளிக்கள உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2781 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 34 ½<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்: A/L / கணனி பகுதி வேலை<br>தொ.இ: G/1416 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 15 செவ் 2 ல்<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: A/L / மேற்பார்வையாளர் (கனடா சிற்றிசன்)<br>தொ.இ: B/2782 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 19 செவ் 12 ல்<br>உயரம்: 4’9"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1422 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 17 ¾ செவ் 12 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: சுப்பர் மாக்கற் (சுவிஸ் சிற்றிசன்)<br>தொ.இ: B/2784 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1கி.பா: 42<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: A/L / Dispenser<br>தொ.இ: G/1425 |
| பிறப்பு: 1976 கிறீஸ்தவம்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 31செவ் 1 ல்<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: B.Th (இறையியல்) / சமயப்பணி (மதகுரு)<br>தொ.இ: B/2785 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 28 ½ செவ் 2 ல்<br>தகைமை/தொழில்: A/L /வரவேற்பாளர்<br>தொ.இ: G/1428 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக கடைமையாற்றி ஓய்வு பெறும் முத்துத்தம்பி மகேந்திரனின் மணிவிழா நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது...

# இ.போ.ச. சாரதி மற்றும் நடத்துநர் மீதான தாக்குதலைக் கண்டித்து பணிப்பகிஷ்கரிப்பு

## கலகமடக்கும் பொலிஸாரும் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச பேருந்துச் சாரதி மற்றும் நடத்துநரின் மீதுமேற்கொள்ளப் பட்ட தாக்குதல் சம்பவத்தினைக் கண்டித்து இ.போ.ச பேருந்து ஊழி யர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு முரண்பாட்டைத் தடு க்க கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட பெருமளவு பொலிஸார் யாழ். மத்திய பேருந்து நிலைய த்தில் குவிக்கப்பட்டதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் மீது யாழ்.புளியங்கூடல் பகுதியில் வைத்து தனியார் பேருந்தின் சாரதியொருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாக்குதல் மேற் கொண்டதாக கூறப்படுகின்றது.

இதேவேளை மேற்படி தாக்கு தலில் காயமடைந்த யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை சேவையில் ஈடு படும் இ.போ.ச. பேருந்தின் சாரதி யான எம்.சுரேந்திரன் (வயது 27), நடத்துநரான எஸ். பரமானந்தன் (வயது 41) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இதனையடுத்தே மேற்படித் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித் தும், தாக்குதலாளிகளை பொலி ஸார் கைது செய்யவேண்டும் எனக் கோரியும் நேற்று முன்தினம் இப்பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற் றது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச பேருந்து ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் வைத்து அதே பாதையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டி ருந்த தனியார் சிற்றூர்தியை முந்திச் சென்றுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த தனியார் சிற்றூர்தியின் நடத்துநர் இ.போ.ச பேருந்திற்கு குறுக்கே சிற்றூர்தியை நிறுத்தி பேருந் தினை தடுத்து நிறுத்திய பின்னர் பேருந்தின் சாரதி மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் ஊர்காவற்றுறை இ. போ.ச பேருந்தின் சேவை முழு மையாக பாதிக்கப்பட்டிருந்தது. நடுவழியில் நின்ற பயணிகளை ஏற்றி வருவதற்காக சம்பவ இடத்திற்குச் சென்ற மற்றுமொரு பேருந்தினை யும தனியார் சிற்றூர்தியினர் இடை மறித்து தாக்குதல் நடத்தியுள்ள னர்.

இத்தாக்குதலில் குறித்த பேருந் தின் நடத்துநர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து தம் மீது தாக்கு தல் நடத்தியவர்களை கைது செய் யும்வரைக்கும் தாம் சேவையில் ஈடுபடப் போவதில்லை என்று தெரி வித்த இ.போ.ச ஊழியர்கள் அனை வரும் சேவைப் புறக்கணிப்பில் ஈடு பட்டனர்.

இதனால் பாடசாலை சேவை கள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட் டது. பருவகாலச் சீட்டினை நம்பி பயணம் செய்யும் மாணவர்கள் ஏராளமானவர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நிரம்பி காணப்பட்டனர்.

மிக நீண்ட நேரமாக பேருந்து நிலையத்தில் காத்திருந்த மாண வர்கள் தமது பயணத்தினை தொடர முடியாமல் பரிதாபமான நிலையில் பஸ்நிலையத்தில் காத் திருந்தனர்.

இதற்கிடையில் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து ஊழியர்களின் போராட்டத்தினைக் கைவிடுமாறு கோரிக்கை விடுக்கப் பட்டிருந்த போதும் அவர்கள் தமது போராட்டத்தினை தொடர்ந்து மேற் கொண்டிருந்தனர்.

இருப்பினும் தாக்குதல் மேற் கொண்ட நபர் கைது செய்யப்படு வார் என்று உறுதியளிக்கப்பட்ட தன்பின்பு போராட்டத்தை நேற்று முன்தினம் இரவு இபோ.ச ஊழிய ர்கள் கைவிட்டிருந்தனர்.

ஆனாலும் இ.போ.ச ஊழியர் கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதாக கூறி நேற்றையதினமும் அதிகாலை முதல் யாழ்.மத்திய பேருந்து நிலை யத்தில் ஊழியர்கள் பணிப்புறக்க ணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர.

இதேவேளை தனியார் பேரு ந்து ஊழியர்களுக்கும் இ.போ.ச ஊழியர்களுக்குமிடையில் முரண் பாடுகள் அதிகரித்ததையடுத்து கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட பெருமளவான பொலிஸார் யாழ்.மத்திய பேருந்து நிலை யத்தில் குவிக்கப்பட்டதோடு பேருந் துச்சேவைகளும் தடைப்பட்ட தனால் பெரும் பரபரப்பு ஏற்பட் டது.

இதேவேளை பெருமளவான பயணிகள் மத்தியபேருந்து நிலை யத்தில் காத்திருந்ததையும் அவதா னிக்கமுடிந்தது. (அ- 6)

# பிரிட்டன் அமைச்சரின் கருத்தை இலங்கை நிராகரித்தது

(கொழும்பு)

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சர்வதேச தரத்தை கொண்டிருக்க வில்லை என பிரித்தானிய அமை ச்சர் ஹியூகோ ஸ்வயர் வெளியிட்டு ள்ள கருத்தை நிராகரிப்பதாக அரசாங்கம் கூறியுள்ளது.

அவரது இந்த கருத்து இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளை குறைத்து மதிப்பிடுவதாகும் என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இனங்களுக்கு இடை யில் ஐக்கியம் மற்றும் சகோதரத்து வத்தை அதிகரிப்பதற்காக எடுக்கப்ப ட்ட நடவடிக்கையே கற்றுக்கொ ண்ட பாடங்கள் மற்றும் நல்லிண க்க ஆணைக்குழு மற்றும் அதன் அறிக்கை என்பனவாகும்.

இதனால் பிரித்தானிய அமைச்ச ரின் கருத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது அவரது தனிப்பட்ட கருத்தாக இருக் கலாம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உள் ளிட்ட உலகில் சகல அமைப்புக ளும் நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை சிறந்ததும், காலத்தி ற்கு ஏற்ற அறிக்கை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கையில் போர் நடை பெற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசார ணைகளை நடத்த இந்த குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன், அது சிறந்த நடைமுறை எனவும் அமை ச்சர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வேளாண்மையும் உணவு பாதுகாப்பும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 45-I

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

"குடும்ப வேளாண்மை" என்பதை இவ்வாண்டின் உலக வருடமாக்கி பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் மற்றும் வளர்ந்துவிட்ட நாடுகளனைத்திற்கும் பொதுவான விடயமாக கொண்டாடுவதற்காக ஐக்கிய நாடுகள் தாபனம் 2014 ஆண்டினை பிரகடனப்படுத்தியிருக்கின்றது.

இது ஒரு முன்னோடியான திட்டமென கருதினாலும் இச்செய்தியை அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்துதல் மிக முக்கியமானதாகும். குடும்ப வேளாண்மையின் பயன்பாடுகளை அனைவருக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும். குடும்ப வேளாண்மையின் மூலமாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களது தற்போதைய வாழ்க்கை நிலைமையை தெரிந்து கொண்டு அவர்களுக்கு வேண்டிய தேவைகளை செய்வதற்கும் முடியும்.


இதனை கருப்பொருளாக்கி குடும்ப வேளாண்மையின் மகத்துவத்தை உலகறியச் செய்வதற்கான திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பசி பட்டினியின் கோரப்பிடியிலிருந்து உலக மக்களைக் காப்பாற்றலாம் என எண்ணுகின்றனர். குடும்ப வேளாண்மையின் மூலம் மக்களுக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடிவதுடன் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன் எம்மிடமுள்ள இயற்கை வளங்களை சிறப்பாக பயன்படுத்தவும் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் அத்துடன் நிலைபேறான விவசாயத்தை பேணவும் முடியும்.

குடும்ப வேளாண்மையின் குறிக்கோளாக விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன உள்வாங்கப்பட்டு அவற்றின் மூலம் பரந்து பட்ட அளவில் விவசாய அபிவிருத்திக்கான திட்டங்களை சூழலுக்கியைவானதாக மாவட்ட மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் வடிவமைப்பதற்கு இது உதவும்.

குடும்ப வேளாண்மை என்பது குடும்பம் சார்ந்த உணவுத்தேவையை பூர்த்தி செய்வதாகும். இதில் குடும்ப உறுப்பினர்கள் பங்குகொண்டு பயிர்களை வளர்த்தல், கால்நடைகளை வளர்த்தல், மீன்வளர்த்தல், கால்நடைகளுக்கான தீவனப் பயிர்களை வளர்த்தல் என்பனவாகும்.

குடும்ப வேளாண்மையின் மூலமாக உலக உணவு பாதுகாப்பினை ஏற்படுத்த முடியும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாரம்பரிய உணவுகளை உண்ணுவதனை ஊக்கப்படுத்துவதும் சமச்சீரான உணவை உண்பதனை சிபார்சு செய்வதற்கும் முடியும். அத்தோடு வேளாண் சூழல் தொகுதியை பாதுகாப்பதும் உள்ளூர் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும் முடியும். குடும்ப வேளாண்மையின் மூலமாக உள்ளூர் பொருளாதார நிலை விருத்தியுறும்.

கிராமிய மட்டத்தில் உள்ள அனைத்து வளங்களையும் இனங்கண்டு அவற்றை வினைத்திறனான வகையில் பயன்படுத்தவும் அதேநேரத்தில் எங்களுடைய



வளங்களை பாதுகாக்கவும் வழிபிறக்கும்.

குடும்ப வேளாண்மை என்றவுடன் பலர் இது விவசாயிகளுக்குரியதென தப்பான அபிப்பிராயம் கொள்ளக் கூடாது. அனைவருக்குமான வேளாண்மையென கருத்தில் எடுக்க வேண்டும்.

ஏனெனில் உணவு உண்ணுவதற்காக செய்கின்ற வேளாண்மையாக இருப்பதனால் உணவு உண்ண நினைக்கும் எவருக்கும் இவ்வேளாண்மை கைகொடுக்கும். "உழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்பது சொல்லி வைத்த கருத்தும் அதுதானே. நஞ்சற்ற சுகாதாரமான உணவு உற்பத்தி செய்து உண்பதற்கான வாய்ப்பாக இதனை கருதலாம். உலகளாவிய ரீதியில் உணவுற்பத்திக்கு தேவையான அனைத்து வழிகளையும் கருத்தில் கொண்டிருக்கும் இந்நேரத்தில் குடும்ப வேளாண்மை முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

ஆபிரிக்கா தேசத்தில் மக்கள் இன்னும் பசி பட்டினியால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. மக்களுக்கு உண்ண உணவில்லை. இதற்கு மேல் சத்துணவுக் குறைபாடும் மக்களை வாட்டியெடுக்கின்றது.

இதன்காரணமாக குடும்ப வேளாண்மையினை ஊக்குவித்து மக்களுக்கு தேவையான அடிப்படை உணவினை தயாரித்து கொடுக்கின்ற உள்ளங்கள் இன்னும் இருக்கின்றன. வறுமையில் சிக்கியிருக்கும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க குடும்ப வேளாண்மை முயற்சிக்கின்றது.

எமது பிரதேசத்திலும் உணவுப்பற்றாக்குறை நிலவுவதை அவதானிக்கலாம். நெல்லில் நாம் தன்னிறைவு கண்டுவிட்டோம் என மார்தட்டி நின்றாலும் உணவுக்கான கிடைதன்மை சரியான வழங்கல் இன்மையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் மக்கள் உணவுக்காக அதிக விலைகொடுக்க வேண்டியிருக்கின்றது. தற்போது எழுந்துள்ள காலநிலை மாற்றம் இவையெல்லாவற்றுக்கும் கட்டியங்கூறுவது போல இன்னும் பயிர் விளைச்சலை பாதித்திருக்கின்றது. நெற்செய்கை வடமாகாணமெங்கும் இம்முறை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. வழமையாக பெய்யும் மழை பிந்தியும் வழக்கமாக பெய்யும் அளவுக்கு குறைவாகவும் பெய்திருக்கின்றது. இயற்கையின் திருவிளையாடலாக நாம் நினைத்திருந்தாலும் எவ்வகையிலோ நாம் இவ்வூறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவர்களாகவும் இருக்கின்றோம். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு உலக அளவில் குடும்ப வேளாண்மையை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் இவ்வாறான பிரகடனம் வினைத்திறன் மிக்கதாக அனைவருக்கும் உணவு என்னும் நிலையை ஏற்படுத்தும் என கொள்வோமாக.

# முஸ்லிம்களின் சொத்து இழப்பு குறித்து அரசு கணக்கெடுப்பு நடத்த வேண்டும்

## ஹசன் அலி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் போர்க் காலத்தில் முஸ்லிம் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்துச் சேதங்கள் குறித்த கணக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

அப்படியான கணக்கெடுப்பை அரசே விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்றும், அதன் மூலமே முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளின் பாதிப்புகள் முழுமையாகத் தெரியவரும் என்றும் அக்கட்சியின் பொதுச் செயலர் ஹஸன் அலி தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

தமது தரப்பில் பல அமைப்புகள் இந்தக் கணக்கெடுப்பு மற்றும் குறிப்புகளை சேகரித்திருந்தாலும், அவற்றுக்கு சட்டரீதியான ஒரு அந்தஸ்து இல்லையென்றும், அதன காரணமாகவே அரசே இப்படியான நடவடிக்கையை எடுக்க வேண் டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமது கோரிக்கை தமிழ் மக்க ளின் குரலுக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே இருக்கும் என்றும், தமிழர்களின் நிலைப்பாட்டுக்கு முரணானது இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த முப்பது ஆண்டுகளு க்கும் மேலான காலகட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், வாழ்வாதார பாதிப்பு கள் போன்ற விடயங்கள் எங்குமே பதியப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டு ள்ள பாதிப்புகள் குறித்த கணிப்பீடு களைச் செய்ய இப்போதுதான் காலம் கனிந்துள்ளது என்று கூறும் ஹஸன் அலி, இப்போதுதான் போர்க் கால இழப்புகள் குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது என்றும், அதனாலேயே இந்தக் கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் முன்வைத்து ள்ளது என்றும் கூறினார்.

இலங்கையில் சிங்களவர் மற்றும் தமிழ் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்தே உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் பேசப்பட்டு வருவது, பாதிக்கப்பட்ட இன்னொரு தரப்பான முஸ்லிம்களுக்கு மிக வும் வேதனையை அளித்துள்ளது என்றும் அவர் கூறுகிறார். (அ-2)

# புற்றுநோய் விழிப்புணர்வு இணையத்தளம் ஆரம்பம்

(கொழும்பு)

உலக புற்று நோய் தினம் இம்மாதம் 4 ஆம திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ்வருடத்திற்கான தொனிப் பொருள் மாயத்திரையை அகற்றி உண்மையைப் பாருங்கள என்ப தாகும்.

இதற்கமைவாக இலங்கை மக்க ளுக்கு புற்றுநோய் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகை யில் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன www.nccp.gov.lk என்னும் இணையத்தளத்தை நேற்று முன் தினம் அங்குரார்ப் பணம் செய்து வைத்தார்.

இதனுடன் இணைந்ததாக 0715320320 என்ற அவசரதொலை பேசி இலக்கமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. குறித்த தொலைபேசி இலக்கத்தி னூடாக காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் எமது உள்ளூர் வைத்தியர்களிட மிருந்து புற்றுநோய்க்கான அறிகுறிகள், சிகிச்சை முறை என்பன குறித்து பொதுமக்கள் தமது சந்தே கங்களை தீர்த்துக் கொள்ள முடியு மெனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

706

…முனிவர் கூறியபடி மாதவனும் விரதங்களைக் கடைப்பிடித்தான். அதைக் கண்டு மகிழ்ந்த மகானந்தர், ஒருநாள் "மகனே! இங்கிருந்து கிழக்குத் திசையில் கரடிக் குகை என்று ஒன்று உள்ளது. அங்கு சில மூலிகைச் செடிகள் காணப்படும். அவற்றை எடுத்து வா! அந்தக் குகையில் ஒரு மலைப் பாம்பு வசிக்கிறது! எச்சரிக்கை!" என்று சொல்லி அனுப்பினார்.

மாதவன் அவ்வாறே கரடிக் குகைக்குச் சென்று மூலிகைகளைப் பறித்தான். அவனைக் கண்டதும் சுருண்டு படுத்திருந்த மலைப் பாம்பு அவனைப் பிடிக்க வந்தது.

## சஞ்சீவனி மந்திரம்




ஆனால், அதனிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் விரைவாகத் தன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பினான் மகானந்தர் அந்த மூலிகைகளை ஒரு கமண்டலத்தில் இட்டார்.

பிறகு, "இங்கிருந்து வடக்கில் பேய்காடு என்ற அடர்ந்த வனம் உள்ளது. வனத்தின் நடுவில் ஒரு மிகப் பெரிய ஆலமரம் உள்ளது. ஆலமரத்தின் நிழலில் சில அபூர்வ மூலிகைகள் உள்ளன. அவற்றை எடுத்து வா! அங்கு பிசாசுகள் உள்ளன! எச்சரிக்கை!" என்றார்.

உடனே, மாதவன் பேய்காட்டில் உள்ள ஆலமரத்தை அடைந்தான். அவன் சென்ற போது, ஆலமரத்தில் பிசாசுகள் கும்மாளமடித்துக் கொண்டு இருந்தன. பகலில் ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்த அவற்றின் கொண்டாட்டம் நடு இரவு வரைத் தொடர்ந்தது. பின்னர் அவை உறங்கத் தொடங்கியவுடன், சத்தமின்றி மூலிகைகளைப் பறித்துக் கொண்டு மாதவன் திரும்பினான். மகானந்தர், அந்த மூலிகைகளையும் அதே கமண்டலத்தில் போட்டார்.

அடுத்ததாக அவன் காட்டிலுள்ள முதலைக் குளத்திற்குச் சென்று, அங்கு நடமாடும் முதலைகளிடம் சிக்காமல், குளத்து நீரில் வளர்ந்திருந்த அவர் குறிப்பிட்ட சில மூலிகைகளையும் கொண்டு வந்தான். அவற்றையும் அவர் கமண்டலத்தில் இட்டார். பிறகு அதில் நீர் ஊற்றினார். அதன் பிறகு அவனை நோக்கி, "நீ சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்கத் தகுதியானவன்தான்!" என்று சொல்லி அதை உபதேசம் செய்தார். பிறகு, "மகனே! இந்த கமண்டலத்திலுள்ள மூலிகை நீரை எடுத்துச் செல்! அதை உன் தந்தைக்குப் பருகக் கொடுத்து, சஞ்ஜீவனி மந்திரத்தை உச்சரிப்பாய்! உடனே, உன் தந்தை குணமாகிவிடுவார். ஆனால், இதை ஒரேயொரு முறை ஒருவருக்குத்தான் உபயோகிக்க முடியும். அவருக்குப் பதிலாக, நீ அதை அருந்தினால் உனக்கு சம்பூர்ண ஞானம் உண்டாகும்.

அவை உலக நன்மைக்குப் பயன்படும்!" என்று கூறினார். "நன்றி, சுவாமி! ஆனால் இதை என் தந்தைக்குத்தான் பயன்படுத்துவதாக இருக்கிறேன்!" என்று கூறி அவரை வணங்கி மாதவன் விடை பெற, "நீ விரும்புவது கட்டாயம் நடக்கும்!" என்று அவர் அவனை வாழ்த்தினார்.



தன் வீட்டை அடையும் முன், யோகி தயானந்தாரிடம் சென்று அவருக்கு நன்றி கூற,

அவர் "மாதவா! நீ வெற்றியுடன் திரும்பியது கண்டு மகிழ்ச்சி! நாளை சூரியோதயத்திற்குள் நான் இறந்து விடுவேன். ஆகையால் என்னிடம் இருந்து முடிந்தளவு நீ கற்றுக்கொள்" என்றார்.

மாதவனும் "சரி"யென்று கூற அவர் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். நள்ளிரவானதும் மாதவன், அவரிடம் "சுவாமி உங்களிடம் இருந்து அனைத்தையும் கற்க விரும்புகிறேன். அதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா!" என்று கேட்டான். அதற்கு அவர், "உன்னிடத்தில் உள்ள கமண்டல நீரை எனக்கு அருந்தக் கொடுத்து, சஞ்ஜீவனி மந்திரத்தை உச்சரித்தால், நான் பல ஆண்டுகள் வாழ்வேன்!" என்றார். உடனே மாதவன் கமண்டல நீரை அவருக்குஅளித்து, மந்திரம் ஓத, அவரும் புத்துயிர் பெற்றார்.

அவரிடம் இருந்து முழுவதையும் கற்றுக் கொண்டபின், ஊருக்குத் திரும்பிய மாதவனுக்கு ஒரு பேராச்சரியம் காத்திருந்தது. அவனுடைய தந்தை சஞ்ஜீவனி மந்திரத்தின் உதவி இன்றியே பூரண குணம் அடைந்து இருந்தார்.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2014
01

- 1662 - ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.
- 1788 - ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப் படகுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1793 - ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.
- 1832 - ஆசியாவின் முதலாவது அஞ்சல் (தபால்) வண்டி சேவை கண்டியில் ஆரம்பமாகியது.
- 1864 - டென்மார்க்-புரூசியா போர் ஆரம்பமானது.
- 1880 - யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் முதலாவது தபால் வண்டி சேவையை ஆரம்பித்தது.
- 1884 - ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற் பதிப்பு வெளியானது.
- 1893 - தொமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப்பிடிப்பகத்தை நியூ ஜேர்சியில் கட்டி முடித்தார்.
- 1908 - போர்த்துக்கல் மன்னன் முதலாம் கார்லொஸ் மற்றும் அவனது மகன், இளவரசர் லூயிஸ் பிலிப் லிஸ்பன் நகரில் கொல்லப்பட்டனர்.
- 1913 - உலகின் மிகப்பெரிய தொடருந்து நிலையம் Grand Central Terminal நியூயோர்க் நகரில் திறக்கப்பட்டது.
- 1924 - சோவியத் ஒன்றியத்தை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.
- 1946 - நோர்வேயின் ட்றிகிவா லீ ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1958 - எகிப்து மற்றும் சிரியா ஆகியன இணைந்து 1961 வரையில் ஐக்கிய அரபுக் குடியரசு என ஒரு நாடாக இயங்கின.
- 1979 - 15 ஆண்டுகள் நாடு கடந்த நிலையில் வாழ்ந்த ஈரானின் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி டெஹ்ரான் திரும்பினார்.
- 2003 - கொலம்பியா விண்ணோடம் பூமியின் வளிமண்டலத்தினுள் வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - நேபாள மன்னர் ஞானேந்திரா நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

### பிறப்புகள்

- 1905 - எமிலியோ செக்ரே, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1989)
- 1931 - போரிஸ் யெல்ட்சின், ரஷ்ய முன்னாள் அதிபர் (இ. 2007)

### இறப்புகள்

- 1958 - கிளிண்டன் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1888)
- 1964 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத்துறையின் முன்னோடி (பி. 1873)
- 1976 - வேர்னர் ஐசன்பேர்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் (பி. 1901)
- 1976 - ஜோர்ஜ் விப்பிள், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1878)
- 1986 - அல்வா மீரடல், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1902)
- 1999 - வானம்பாடி யோகராஜ், வில்லிசை கலைஞர், நாடக ஆசிரியர், நடிகர், மேடைப்பாடகர் (பி.1948)
- 2003 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (பி. 1961)

### கல்பனா சாவ்லா



விண்வெளிக்கு பயணம் செய்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பானா சாவ்லா,

இவர், இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி பனாரஸ் லால் சாவ்லாவுக்கும், சன்யோகிதா தேவிக்கும் மகளாக,

இவர் ஒரு பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு சுனிதா மற்றும் தீபா என்ற இரண்டு சகோதரிகளும், சஞ்சய் என்ற சகோதரனும் இருந்தனர்.

கல்பானா சாவ்லா, தனது ஆரம்ப கல்வியை தனது ஊரில் உள்ள அரசு பள்ளியில் தொடங்கினார். 1982 இல் "பஞ்சாப் பொறியியல் கல்லூரியில்" விமான ஊர்தியியல் துறையில் கல்விப் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார்.

இவர், 1983 இல் ஜீன் பி எர ரே ஹாரிசன் என்ற விமானப் பயிற்சி ஆசிரியரை மணம் முடித்தார்.

பின்னர், 1984 இல் அமெரிக்காவில் உள்ள "டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில்" விண்வெளிப் பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1986ல் பௌல்தேரில் உள்ள "கோலோரடோ பல்கலைக்கழகத்தில்" இரண்டாவது முதுகலைப் பட்டமும், பிறகு 1988ல் வெண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

1988 ஆம் ஆண்டு, நாசா அமெஸ் ஆராய்ச்சி கூடத்தில் "ஒவெர்செட் மேதொட்ஸ் இன்க்யின்" துணைத்தலைவராக பணியாற்றிய அவர் வீஃஎஸ்.டி.ஓ.எல் (V/STOL) இல் சி.எஃடி (CFD) ஆராய்ச்சி செய்தார். விமானம் மற்றும் கிளைடர்களை ஓட்டக் கற்றுக்கொடுக்க தகுதிச் சான்றிதழ் பெற்றதோடு மட்டுமல்லாமல், ஓட்டவும் அனுமதி பெற்றிருந்தார்.

1995 ல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் "கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ்-87 (STS-87) இல்" பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். 1997 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்த பயணத்தில், சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாக பூமி திரும்பினார். இதன்மூலம் விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையும் பெற்றார்.

மீண்டும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தன்னுடைய இரண்டாவது பயணத்திற்குத் தயாரானார். ஈற்றில், 2003-ம் ஆண்டு ஜனவரி 16-ந் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ்-107 (STS-107) அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா, உள்ளிட்ட 7 பேர் அதில் பயணித்தனர். 16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பிய அவர்கள் சென்ற அந்த விண்கலம், அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லா உள்பட ஏழு விலைமதிப்பற்ற விண்வெளி வீரர்களும் அதில் பலியாகினர்.

ஒரு சாதாரண பள்ளியில் படித்து, பலர் வியக்கும்படி தன் கனவுகளை நனவாக்கி வாழ்ந்து காட்டியவர் கல்பனா சாவ்லா. பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர், இந்தியாவிற்கு உலகப் புகழ் சேர்த்தவர் என்றால் அது மிகையாகாது. 'கனவுகளைக் கண்டு அந்த கனவுகளை நனவாக்குவதற்கு விடாமுயற்சியோடும், முழுமனதோடும் செறபட்டால் வெற்றி நிச்சயம்' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தி சென்ற வீரப்பெண் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

"ம் வழி விடுங்கள்"

"காவலா, அவரை ஏன் அப்புறப் படுத்துகிறாய். துறவியாரே! காவலனை மன்னிக்க வேண்டும்" என்றான் பாண்டியன்.

சித்தரோ வெறுமனே ஒரு சிரிப்பு மட்டுமே சிந்தினார்.

இவர் என்ன மன்னன் என்ற மரியாதைகூட இல்லாமல் அலட்சியமாகச் சிரிக்கிறார் என்று சிந்தனையிழந்த பாண்டியன், அவரைப் பார்த்து, "யோகியரே! தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்றான்.

"பாண்டியா, நம்முடைய இடம் காசி, சிவனடியார்கள் எல்லாம் எனது சொந்தக்காரர்கள், சித்து வித்தைகள் செய்து காட்டுவதே என்னுடைய வேலை. மதுரை மக்களுக்குச் சித்துக்கள் சில காட்டி அவர்கள் குறைகளைத் தீர்க்கலாம் என்று இங்கு வந்துள்ளேன். என்னைப் பற்றிய விவரம் போதுமல்லவா?" என்றார் சித்தர் புன்னகையுடன்.

தன்னை "பாண்டியா!" என்று ஏக வசனத்தில் அழைத்தது மன்னனுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. சித்தரை எப்படியாவது மட்டம் தட்ட வேண்டும் என்று எண்ணினான். அந்தச் சமயத்தில் வேளாளன் ஒருவன் வளமாகப் பருத்து வளர்ந்திருந்த ஒரு கரும்பைக் கொடுத்து அரசருக்கு வணக்கம் செலுத்தினான்.

பாண்டிய மன்னன் அந்தக் கரும்பைக் கையில் வாங்கிக் கொண்டான். உடனே சித்தரைப் பார்த்து, "வல்லவர்களுக்கெல்லாம் வல்லவர்" என்று பெருமைப்பட்டுக் கொள்பவரே, இதோ இந்தத் தூணிலுள்ள கல் யானைக்கு இந்தக் கரும்பைக் கொடுத்து தின்ன வைத்து விட்டீர்களானால், உங்களை எல்லாம் வல்ல சித்தராக ஏற்றுக் கொள்கிறோம். இனி நீர் சித்தரல்ல. இந்த சொக்கநாதப் பெருமானும் நீர்தான் என்று ஒப்புக்கொண்டு நீர் கேட்டதை யாம் தருகிறோம்" என்றான்.



கருவூர் சித்தர்

சித்தர் புன்னகை செய்தார். "பாண்டியா! உன்னால் ஆக வேண்டிய காரியம் எனக்கு எதுவும் கிடையாது. சித்த வித்தைகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். என் வித்தைகள் மூலம் உன் நாட்டை, உன் மக்களை, ஏன் உன்னையே விலை பேசி வாங்கிடமுடியும். ஆனால், எனக்கு எதிலும் ஆசை கிடையாது. இருந்தாலும் மன்னனாகிய நீ ஆசைப் பட்டுவிட்டாய். உன் ஆசையை நான் நிறைவேற்றுகிறேன். இதோ இந்தக் கல் யானை கரும்பைக் கடித்துத் தின்பதைப்பார்" என்று கூறிவாறே மன்னனுக்கு அருகிலிருந்த தூணோடு தூணாக அமைக்கப்பட்டிருந்த அந்தக் கல் யானையை கடைக்கண்ணால் நோக்கினார்.

என்ன ஆச்சரியம்! கல் யானையின் கண் திறந்தது. தனது நீண்ட துதிக்கையை நீட்டியது. பாண்டியன் கையிலிருந்த கரும்பைப் பறித்துத் தனது வாய்க்குள் செலுத்திச் சாறு ஒழுகும்படிக்குக் கடித்துத் தின்றவாறே, சித்தரைப் பார்த்து துதிக்கையை இங்குமங்கும் ஆட்டிக் கொண்டு நின்றது.

சித்தர் யானையைத் தட்டிக் கொடுத்தார். சிறிது நேரத்தில் யானை தனது துதிக்கையை வீசிப் பாண்டியன் கழுத்தில் அணிந்திருந்த மணிமாலையை எட்டிப் பிடித்தது.

மன்னனின் மெய்க்காவலர்கள் கோபம் கொண்டு யானையை அடிப்பதற்காகப் பாய்ந்து வந்தனர். யானை அவர்களைச் சட்டை செய்யாமல் மணிமாலையை விழுங்கிவிட்டது. பலர் முன்னிலையில் தனது முத்து மாலையை யானையை விட்டுப் பறிக்க வைத்த சித்தரின் மேல் மன்னன்

## ஆன்மீகம் 20

கோபம் கொண்டான்.

மன்னனின் கோபத்தைக் கண்ட காவலர்கள் சித்தரை அடிக்க வந்தனர். புன்னகை மலர்ந்த திருமுகத்தோடு "நில்லுங்கள்" என்றார் சித்தர். காவலர்கள் உடனே சிலை உருவம் போல அப்படியே ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டார்கள்.

தன் கண்ணெதிரிலேயே தன்னுடைய அதிகாரத்தை செல்லாததாக்கிய இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்ட பாண்டியனுக்குக் கோபம் விலகி, சித்தரின் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. சித்த மூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி



ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



இந்தி நடிகர் திலீப் குமார்

32

**தி**லீப் ராம் *அவுர் ஷ்யாம்* படத்தில் நடிக்கும் போது, அந்தப் படத்தின் தயாரிப்பு கண்காணிப்பாளராக இருந்த ராதாகிருஸ்ணன், எனக்கு அவரை அறிமுகப்படுத்தினார். அவர்தான் *மகாதேவி* படம் எடுத்தவர். டைரக்டர் சுந்தர்ராவ் நட்கர்னியின் மைத்துனர்.

எனக்கு ஓரளவு உருது மொழி தெரியுமாதலால் திலீப்போடு பேச சௌகர்யமாக இருந்தது. எனக்குப் பாரசீக மொழியும் அராபி மொழியும் தெரியுமென்பதால் திலீப் என்னுடன் சுத்தமான உருதுவில் பேசினார். பல விடயங்களைப் பற்றி விவாதித்தும் இருக்கிறோம்.

அந்தப் படம் முடிந்ததும் *சுப்ஹ அவர் ஷ்யாம்* என்ற படத்தை துவக்கினோம். திலீப்பிற்கு வேறு படங்கள் இருந்ததால், சஞ்சீவ் குமாரை ஒப்பந்தம் செய்தோம். அது ஈரான் நாட்டு கூட்டுத் தயாரிப்பு-சாணக்யா டைரக்ஷன். வஹீதா ரஹ்மானுடன் பர்தீன் என்ற சர்வதேச நடிகரும் நடித்தார். அவர் ஈரான் மன்னரின் உறவினர்.

அப்படமும் முடிந்தபின் ராதா கிருஷ்ணன் திலீபை வைத்து வேறு படம் துவக்கினார். என்னைக் கதை எழுத நியமனம் செய்தார். திலீப்பும் பூரண திருப்தியுடன் ஒப்புதல் அளித்தார்.

செம்மலிடம் விடைபெற்று பம்பாய் சென்றேன். "திலீப் குமாருக்குக் கதை எழுத சென்னையிலிருந்து யார் வந்திருக்கிறார்" என்று பார்க்க பல கதாசிரியர்கள் வந்தார்கள்.



எம்.ஜி.ஆருடன் இந்தி நடிகர் திலீப் குமார், என்.டி.ராம்ராவ்

கம்பதாசன் ஏற்கனவே திலீப் குமாருக்கு *ஆன்* படத்திற்கு வசனம் எழுதி இருக்கிறார். அவரது ரூபத்தில் வேஷ்டி, ஜிப்பா வெற்றிலைப் பெட்டியுடன் இருப்பேன் என்று நினைத்து வந்தவர்களுக்கு ஏமாற்றம். நான் பாண்ட்- சிலாக் போட்டிருந்தேன். இளமையாக இருந்தேன்.

சிலர் உயர் ரக மது வகைகளை மரியாதைக்காகக் கொண்டு வந்தனர். நான் குடிப்பதில்லை என்று சொன்னதும், குடிக்காமல் எப்படி எழுதுகிறீர்கள் என்று வினவினர்.

ஒரு பெரிய இயக்குநர் "நீங்கள் குடிக்காவிட்டால் அரை மனிதர். முழு மனிதராக இருக்க முடியாது" என்றார்.

திலீப் குமாரிடம் நான் குடிக்காததை ஒரு குற்றமாகவே முறையிட்டனர்.

"என் கஜா ஸாப் எம்.ஜி.ஆரிடம் இருப்பவர். அவருக்குக் குடியென்றால் பிடிக்காது" என்று சமாதானம் செய்தார் திலீப்.

பி.ஆர்.சோப்ரா வந்தார். (ரிவியில் மகாபாரதம் எடுத்து டைரக்ஷன் செய்தவர்) "நீங்க ரொம்ப சின்னவரா இருக்கீங்களே, எங்க திலீப்ஜி ஒரு புலியாச்சே" என்று கேட்டார்.

"நான் பல வருஷமா ஒரு சிங்கத்திடம் இருக்கிறேன். அதனால் சமாளிக்கலாம்" என்று செம்மலைச் சுட்டிக் காட்டிச் சொன்னேன். மௌனமாகி விட்டார்.

இன்று மாபெரும் நடிகையாக, எண்ணிலடங்கா விருதுகள் பெற்ற ஷப்னா ஆஸ்மி அப்போது குழந்தை. அவரது தந்தை கைஃபீ ஆஸ்மி எனக்கு நண்பரானார்.

சமத்துவச் சீலர் காஜா அஹமது அப்பாஸ் (கே.ஏ.அப்பாஸ்) அவர்களைப் பாரக்கும் பாக்யம் பெற்றேன்.

அவரும் செம்மலைப் பற்றிக் கேள்விப்பட்டதாகவும் "*சந்திரோதயம், நாடோடி மன்னன், எங்க வீட்டுப் பிள்ளை* படம் பார்த்ததாகவும் எங்க வீட்டுப்பிள்ளையில் இருந்த கதை *ராம் அவுர் ஷியா* மில் இல்லை. உங்கள் எம்.ஜி.ஆர் நல்லதைச் சொன்னார். அதை மக்கள் கேட்கிறார்கள். சொல்லுபவரைக் கொண்டுதான் சொல்லும் விடயத்திற்கு மதிப்பு ஏற்படுகிறது" என்றும் சொன்னார்.

சினிமா என்பது ஒரு பொழுது போக்கு. அதை ஒரு பல்கலைக் கழகமாக மாற்றி இருக்கிறார் எங்கள் எம்.ஜி.ஆர். அதனால் எம்.ஜி.ஆர் எழுத்துக்களில் மனிதர், மேதை, மேலோன் என்ற இந்த மூன்றுமாக இருக்கிறார் என்றே நினைக்கிறேன் என்று அவர் சொன்னபோது புல்லரித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்துடன் அறவிடப்படும் மின் சீராக்கல் கட்டணம் நீக்கப்படும்

## எரிசக்தி அமைச்சர் பவித்திரா



**(கொழும்பு) நாட்டில் எந்தவித மின்சார நெருக்கடியும் கிடையாது. நுரைச்சோலை அனல் மின்நிலையம் செயலிழந்துள்ள போதிலும் எக்காரணத்தைக் கொண்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

நுரைச்சோலை மின்நிலையம் அமைப்பதற்கு செலவிடப்பட்ட முழுத்தொகையும் மின் உற்பத்தி மூலம் மீளப்பெறப்பட்டுள்ளதாகக் கூறிய அமைச்சர், மேலதிகமாக 10 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய மின்சார உற்பத்தி தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

நுரைச்சோலையின் இரண்டாம் மூன்றாம் கட்டங்கள் மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதும் மின்சார சீராக்கல் கட்டணத்தை இந்த வருடத்தில் அகற்றி பாவனையாளரகளுக்கு நிவாரணம் வழங்க உத்தேசித்திருப்பதாக இங்கு குறிப்பிட்ட அமைச்சின் செயலாளர், இது தொடர்பில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அறிவித்திருப்பதாகவும் கூறினார்.

குறைந்த விலையில் மின் உற்பத்தி செய்யும் பல திட்டங்கள் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை நாம் ஆரம்பித்திருக்காவிட்டால் நாட்டுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஏனைய நாடுகளில் பெருமளவில் அனல் மின்நிலையங்கள் காணப்படுகின்றன.

எமது நாட்டில் ஒரேயொரு அனல மின்நிலையம் இருப்பதாலேயே அதன் குறைபாடுகள் குறித்து அதிகளவில் பேசப்படுகிறது என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர், நுரைச்சோலை அனல்மின்நிலையத்தில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக ஒரு அலகு உற்பத்திசெய்ய 20 ரூபா முதல் 25 ரூபா வரை செலவிடப்படுகிறது.

இதனால் மின்சாரசபைக்கு குறிப்பிட்டளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மக்களுக்குத் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதற்காகவே மின்சாரசபை இவ்வாறு அதிக செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

12 வருடங்களாக நுரைச்சோலை ஆரம்பிக்கப்படாததால் மின்சார சபைக்கு 414 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

நுரைச் சோலை அனல் மின் நிலையத்தில் அடிக்கடி கோளாறு ஏற்படுவது வழமைக்கு மாறான விடயம் என்பதால் அது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது.

மூன்று விடயங்களின் அடிப்படையில் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது. பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் தரக் குறைவாக இருக்கலாம் அல்லது நிர்மாணிப்பின்போது பொறியியலாளர்களால் தவறு நிகழ்ந்திருக்கலாம் அல்லது வடிவமைப்பில் குறைபாடிருக்கலாம்.

சர்வதேச தரத்திற்கு அல்லது சீன அளவிலான உயர்தரத்துக்கு ஏற்ற அனல்மின்நிலையமொன்றை அமைப்பதற்கே இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதன்படி மேற்படி தரத்திற்கான மின்நிலையத்தை பெற சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு ஏற்பட்ட வரட்சிகாரணமாக நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கும வகையில் நம்பகத்தன்மை சோதனை நடத்தப்படாமலே நுரைச்சோலை மின்நிலையத்தின் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஒரு குறைபாடு நடைபெற்றதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நுரைச்சோலை மின்நிலையம் இயங்கிய இரண்டு வருடங்களிலேயே இவ்வளவு இலாபம் பெற முடியுமாகவிருந்தால் இது 25 வருடங்கள் இயங்கினால் அதிக இலாபத்தை ஈட்ட முடியும்.

அனல் மின் நிலையத்தின் மூன்று கட்டங்களும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஒரு அலகு மின் உற்பத்திக்கான செலவு குறைவடையும்.

கடந்த வருடம் நாம் குறிப்பிட்டது போல் மின் கட்டணத்துடன் அறவிடப்படும் மின்சீராக்கல் கட்டணத்தை அகற்ற நடவடிக்கைஎடுப்போமஎன்றார். (அ-2)


## இளைஞர் மாநாட்டில் பங்கேற்கலாம்

சர்வதேச இளைஞர் மாநாடு -2014 எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

6 ஆம் திகதி ஆரம்பநிகழ்வும் 7,8,9 ஆம் திகதிகளில் கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன. 11 ஆம் திகதி மாநாடு நிறைவுபெறும்.

இதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பும்18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தமது விபரங்கள் அடங்கிய கோவையினை அனுப்பி வைக்குமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கோரியுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தமது முழுமையான தகவல் அடங்கிய விபரக் கோவையுடன் எதனால் இவ் விழாவில் கலந்து கொள்ள விரும்புகிறீர்கள் என்பது தொடர்பாக 250 சொற்களில் எழுதி தலைவர்-தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மஹரகம என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது. (அ-2)




இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலவசமாக நுண்கலை வகுப்புக்கள் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்றுவருகின்றது. இதன்போது வயலின், மிருதங்க பயிற்சிகள் வழங்கப்படுவதை படங்களில் காணலாம்.

## ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட சிங்கள ராவயவுக்கு தடை

(கொழும்பு)

அக்மீமன தயாரத்ன தேரர் உட்பட சிங்கள ராவய அமைப்பின் சகல பிக்குமாருக்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்த தற்காலிகமான தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் அலுவலகத்திற்கு எதிரில் அண்மையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி வழக்கு விசாரணைகள் முடியும் வரை சிங்கள ராவய அமைப்பின் பிக்குமார் எவரும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிங்கள ராவய அமைப்பு பிரதமர் அலுவலகத்திற்கு எதிரில் அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், பிரதமரின் அலுவலகத்திற்குள் பலவந்தமாக பிரவேசிக்க முயற்சித்தது.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருந்ததாக தெரியவருகின்றது. (அ-2)

## அமைதிவேண்டி பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

உலக அமைதி உலக சுபீட்சம் வேண்டி ருத்ர ஏகாதசினி மகாயக்ஞம் இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கோப்பாய் பிரதேச சபைக்கு அருகில் உள்ள சாயி சுதா சத்திய சாயி பயிற்சி நிலையத்தில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீன பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வை. மு.ப.முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும்.

எனவே அனைத்து சாயி அடியார்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

## விலங்கென நினைத்து இளைஞன் மீது துப்பாக்கி பிரயோகம்

(மன்னார்)

விலங்கு என நினைத்து துப்பாக்கி சூடு நடத்தியதில் இளைஞன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மன்னார் - சிலாபத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலோகம வயல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து கட்டுத்துப்பாக்கி ஒன்றையும் மீட்டெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச் சம்பவத்தில உயிரிழந்த இளைஞன் 23 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தனது விவசாய, பயிர் நிலத்தை பாதுகாக்கும் பொருட்டு கட்டுத் துப்பாக்கியுடன் நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது தூரத்தில் விலங்கு ஒன்று வருவது போன்று உணர்ந்த அவர் தனது கையில் உள்ள கட்டுத் துப்பாக்கியினால் சுட்டுள்ளார். சம்பவம் இடம்பெற்ற பின்னரே தூரத்தில் வந்தவர் இளைஞன் ஒருவன் என்பதை உணர்ந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட 43 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத சந்தேக நபர்கள் பிரிட்டிஷ் குடியுரிமையை இழப்பர்

## பிரிட்டனில் வருகிறது சட்டம்

(கொழும்பு)

பயங்கரவாதச் சந்தேக நபர்களின் பிரிட்டிஷ் குடியுரிமையை பறிப்பதற்கான திருத்தம் ஒன்றை குடிவரவு சட்டமூலத்தில் இறுதி நேரத்தில் உள்துறை அமைச்சர் தெரேஸாமே கொண்டுவந்துள்ளார்.

அதேவேளை, பிரிட்டனில் உள்ள வெளிநாட்டுக் குற்றவாளிகள் தம்மை நாடு கடத்துவதற்கு எதிராக, இங்கு ஐரோப்பிய மனித வுரிமைச் சட்டங்களை பயன்படுத்துவதை தடை செய்வதற்கான அழுத்தத்தை கொடுக்க விளையும் கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பையும் பிரதமர் டேவிட் கமரூன் சந்திக்கும் நிலை ஏற்படலாம்.

பயங்கரவாதச் சந்தேக நபர்கள் நாடற்றவர்களாக இருந்தாலும் அவர்களது பிரிட்டிஷ் குடியுரிமையை பறிக்க இந்தச் சட்டத்திருத்தம் வழி செய்யும். பிறப்பாலேயே பிரிட்டிஷ் குடியுரிமையைப் பெற்றவர்களுக்கு இது பொருந்தாது. ஆனால், பிரிட்டிஷ் பிரஜைகளாக மாறிய வெளிநாட்டவர்களுக்கு இது பொருந்தும்.

இரட்டைக்குடியுரிமை உடைய பயங்கரவாதச் சந்தேக நபர்கள் பிரிட்டிஷ் கடவுச் சீட்டை இழக்கும் நிலையும் ஏற்படலாம்.

இந்த திருத்தத்துக்கு லிபரல் டெமொக்கிரட் கட்சியின் ஆதரவும் கிடைத்துள்ளது.

குடியுரிமை என்பது ஒரு உரிமை அல்ல. அது ஒரு சிறப்புச்சலுகை என்று கூறியுள்ள குடிவரவு அமைச்சரான மார்க் ஹார்ப்பர், பொது மக்களின் நலனை முன்னிட்டு, இந்தச் சலுகையை ஆபத்தான சிலரிடம் இருந்து பறிப்பது நல்லதே என்று கூறியுள்ளார்.

குடிவரவுச் சட்டத்தில் அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள 50 திருத்தங்களில் இவையும் அடங்குகின்றன.

இந்த திருத்தங்களின் மூலம் பின்வரும் அம்சங்கள் குடிவரவுச் சட்டத்தில் சேர்க்கப்படும்.

வெளிநாட்டு குற்றவாளிகளுக்கு அவர்களது தாய் நாட்டில் கடுமையான ஆபத்து இல்லாதபட்சத்தில், அவர்கள் இங்கு மேன்முறையீட்டு மனுவின் தீர்ப்புக்காகக் காத்திராமல் உடனடியாகவே நாடுகடத்தப்பட முடியும்.

மேன்முறையீடு செய்வதற்கான சட்டரீதியான காரணங்கள் 17 இல் இருந்து 4 ஆகக் குறைக்கப்படும்.

வீடுகளை வாடகைக்கு கொடுப்போர், வாடகைக் குடியிருப்பாளர்கள் நாட்டில் சட்டரீதியான வகையில் தங்கியிருக்கிறார்களா? என்பதை சோதிக்க இந்தச் சட்டமூலம் வலியுறுத்தும்.

வங்கிகள் கணக்குகளை ஆரம்பிக்கும் முன்னதாக வாடிக்கையாளரின் சட்ட ரீதியான குடிவரவு அந்தஸ்தை சோதிக்க•வேண்டும்.

மாணவர்கள் போன்ற சில தற்காலிக குடிவரவாளர்கள் பிரிட்டனின் சுகாதார சேவைக்கு வருடாந்த வரியாக 200 ஸ்டேர்லிங் பவுண்களை கட்டவும் இந்தச் சட்டமூலம் வழிசெய்யும் எனத் தெரிய வருகின்றது. (அ-2)

# கஞ்சா கடத்த முயன்ற மீனவர் கைதானார்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு 60 கிலோ கஞ்சா போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டின் கீழ் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பாம்பன் கடற்கரையில் வைத்து குறித்த மீனவர் கைதாகியுள்ளார்.

அவரின் நாட்டுப் படகில் கஞ்சா போதைப் பொருளை மறைத்து வைத்து இலங்கைக்கு கொண்டு வர முனைந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கஞ்சாப் பொதியை அவர் நடுக்கடலுக்கு கொண்டு சென்று, அங்கு காத்திருக்கும் இலங்கையைச் சேர்ந்த முகவரிடம் கையளிக்க முயற்சித்துள்ளார். தமிழகப் பொலிஸார் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்தே இலங்கைக்கு அதிக அளவில் கஞ்சா கடத்தப்படுகிறது. ஏற்கனவே கடந்த வருடம் இவ்வாறு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட நான்கு தமிழக மீனவர்கள் இன்றும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கேரளாவில் புதிய தூதரகம்

(கொழும்பு)

இலங்கையின் இந்தியாவுக்கான புதிய தூதரக அலுவலகம் எதிர்வரும் வாரத்தில் கேரளாவின் திருவனந்தபுரத்தில் திறக்கப்படவுள்ளது.

கொழும்புக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உறவு காரணமாக சீரற்றுள்ள இந்திய உறவை சரிசெய்து கொள்ளவே இந்த அலுவலகம் திறக்கப்படுவதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழர் விடயத்தில் இந்தியா அண்மைக்காலத்தில் இலங்கை மீது கடும் அழுத்தங்களை பிரயோகித்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியாவுடனான உறவை மேம்படுத்த தமது அலுவகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருவனந்தபுரத்தில் அமையவுள்ள தூதரக அலுவலராக செயற்படவுள்ள ஜீமோகன் ஜோசப்பின் செயலாளர் ஏ ஜெயபிரகாஸ் தெரிவித்துள்ளார்.

ஜீமோகனுக்கு பதவி நியமனக் கடிதத்தை அண்மையில் இலங்கையின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் வழங்கினார்.

இதேவேளை, கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்தில் ஏற்கனவே ரஷ்யா, மாலைதீவு, போன்ற நாடுகளின் தூதரகங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலிகளின் நிகழ்ச்சி நிரலில் வடக்கு மாகாண சபையாம்

## உதய கம்மன்பில கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை போற்றிப் பிரசாரம் செய்யும் இயக்கங்கள் மற்றும் அமைப்புக்கள் தடை செய்யப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய நலனுக்கு விரோதமாக செயற்படுகிறது.

வடமாகாணசபையை உடனடியாக கலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாகாண ஆளுநர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஆட்சி அமைக்கப்பட்டுள்ள வடமாகாணசபையை கலைக்க உத்தரவிட வேண்டும்.

வடமாகாணசபையில் அண்மையில் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடமாகாணசபை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, வடமாகாண சபையை கலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார். (அ-2)



யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உனமைக் கோலி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அண்மையில் சந்தித்த போது.... (படம்:-என்.குமார்)

# ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சியுடன் இணைகிறேன்

## விக்கிரமபாகு தெரிவிப்பு



ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக முதலாளித்துவ கொள்கையுடைய ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து கொள்வதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றோம்.

ரணில் விக்ரமசிங்க ஓர் முதலாளித்துவ ஆட்சியாளர் என்ற போதிலும் அவருடன் இணைந்து செயற்படுகின்றேன்.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் என சில தரப்பினர் நம்புகின்றனர்.

எனினும், பிரபாகரனை கொலை செய்வதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்ற போதிலும், காலனித்துவ நாடுகளினால் ஆக்கபூர்வமான ஒரு பங்களிப்பு வழங்கப்படும் என்பதில் நம்பிக்கையில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உதவிப் பணிப்பாளர் நியமனம்



வடமாகாண பண்பாட்டு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக திருமதி உஷா சுபலிங்கம் நியமனம் பெற்றுள்ளார்.

இவருக்கான நியமன கடிதத்தை வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி வழங்கினார். இவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றியிருந்தார். (அ)

# ஆட்கடத்தலில் ஈடுபட்ட நால்வருக்கு பிரிட்டனில் சிறைத்தண்டனை

பிரித்தானியாவுக்குள் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஆட்கடத்தி வந்த இலங்கையர் உட் பட 5 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்கு வர முயற்சிக்கும் நபர்களிடம் 4 ஆயிரத்து 500 பவுண்களை அறவிட்டு வாகனங்கள் மூலமாக அவர்களை பிரித்தானியாவுக்கு அழைத்துச் செல்லும் சட்டவிரோத செயலில் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளதாக பிரித்தானிய உள் துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 4 இலங்கையர்களும் ஒரு பிரித்தானிய பிரஜையும் அடங்குவதாக உள்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானியாவுக்குள் சட்டவிரோதமாக வரும் நபர்கள் போலி ஆவணங்களை பயன்படுத்தி வட அமெரிக்காவுக்கு செல்வதாக உள்துறை அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரித்தானியாவுக்குள் சட்டவிரோதமாக வந்துள்ளவர்கள் யார் என்பதை அறிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் சட்டவிரோத குடியேற்றவாசிகளை அழைத்து வந்த குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட இவர்களுக்கு மெயிட்ஸ்டோன கிறவுண் நீதிமன்றம் 5 வருடங்கள் மற்றும் 4 மாத சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தி.மு.க. விலிருந்து நீக்கப்பட்ட அழகிரி.. நடப்பது என்ன ?

அழகிரி, ஸ்டாலினை *செத்துப்போகட்டும்* என்று வசை பாடினார்...உட்கட்சி ஜனநாயகத்தை மதிக்கவில்லை போன்ற குற்றச்சாட்டுகளால்...அவர், தமது குடும்ப பாரம்பரிய கட்சியான தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்டது யாவரும் அறிந்ததே...

தி.மு.க. தேர்தலில் வெல்லுகிறதோ இல்லை ஆட்சியைப் பிடிக்கிறதோ இழக்கிறதோ, இவையெல்லாம் தி.மு.க. தலைவர்களுக்கு முக்கியமில்லை. மாறாக வளர்த்துவிட்ட சொத்துக்களை பெருக்குவதற்கும் பாதுகாப்பதற்கும். ஒரு கட்சியென்ற முறையில் இயங்குவது அவசியம். அதில் போனசாக ஆட்சி, அமைச்சர் பதவிகள் வந்தால் மகிழ்ச்சி. இல்லையேல் ஆளும் கட்சிக்கு கப்பம் கொடுத்துவிட்டு தொழிலைத் தொடர்வது அத்தியாவசியம். இது தி.மு.க. என்றில்லை. அ.தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகளுக் கும் காங்கிரஸ், பா.ஜ.க. போன்ற தேசியக் கட்சிகளுக் கும் பொருந்தும்.

ஜெயா- சசிகலா குழுவையும் தி.மு.க.வையும் கருணாநிதி குடும்பம் மற்றும் வட்டார தி.மு.க. பிரமுகர்களையும் ஜெயாவையும் சொத்து சேகரிப்பு வழக்குகள் மூலம், தண்டிக்கமுடியவில்லை என்பதை இங்கே நோக்கவேண்டும்.

ஒருவகையில் இந்த வழக்குகள், ஒரு அரசியல் மிரட்டல் என்பதைத் தாண்டி அடிப்படையையே தகர்த்துவிடும் நோக்கம் கொண்டதல்ல. மேலும் இரு ஆட்சிகளிலும், இரு கட்சிப்பிரமுகர்களும் தங்களது தொழிலை செவ்வனே தொடர்வது எப்படி என்று நினைத்துப்பார்க்க வேண்டும். இதே ஜெயா ஆட்சி தி.மு.க. மீது ஜென்ம பகையும், வெறுப்பும் கொண்டிருந்தாலும் சன் டிவியோ இதர தி.மு.க. பிரமுகர்களும் தொழில்களும் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகவில்லை.

தி.மு.க. ஆண்ட காலங்களில்தான். சன் டிவி மற்றும் திமு.க பிரமுகர்கள் தமது தொழில் சாம்ராஜ்யத்தை பெருக்கினார்கள் என்பதையும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

அழகிரி-ஸ்டாலின் பிரச்சினையில் தி.மு.க. உடைபடுவதையோ இல்லை உருக்குலைந்து போவதையோ தி.மு.க.வின் பெருந்தலைகள் மற்றும் வட்டார தளபதிகள் விரும்ப மாட்டார்கள். மேலும், இது விருப்பம் விருப்பமில்லை என்பதைத் தாண்டி இப்படி ஒரு நிலையெடுத்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தமும் கூட.

வாரிசுப் பிரச்சினையில் அலட்டிக்கொள்வதால் அழகிரி எதையும் இழக்கப் போவதில்லை.

அந்தவகையில் ஸ்டாலின் தான் அவர்களது ஏகோபித்த தெரிவாக இருப்பதும், அழகிரியை புறக்கணிக்க வேண்டியதும் இயல்பாக நடக்கிறது. இந்த நிலையை பொதுவில் அழகிரியே கூட புரிந்து கொண்டிருந்தாலும் பண்ணையார்கள் பவுசு இழந்தாலும் கௌரவத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதாக மறுப்பு தெரிவிக்கிறார்கள். தான் தோற்றுப்போவோம் என்று தெரிந்தாலும் முடிந்தவரை விளையாடுவது என்பது அவர் நோக்கம். முக்கயமாக இந்த ஆட்டத்தில் அழகரி, பொருளாதார ரீதியாக இழக்கப் போவது ஏதுமில்லை.

பல ஆயிரம் கோடிகளாவது அவரது சொத்து மதிப்பில் இருக்குமென்பதாலும் அவற்றை பாதுகாக்க வேண்டிய சட்டபூர்வ சடங்குகளை கவனமாக செய்துமிருப்பாரென்பதால், அழகிரி எதையும் இழக்கப் போவதில்லை. அழகிரியின் ஊடகங்களுக்கான பேட்டியை பார்க்கும் பொழுது அவர், கொஞ்சம் முட்டாள் என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம்.

தனது சாதனையாக மதுரையில் 14 கட்டணக் கழிப்பறைகளை கட்டியதையும், உரம், மருந்து விலைகள் உயராமல் பார்த்துக் கொண்டதையும், பிறந்த நாள் விழாவில் போட்ட பிரியாணி முதலான நலத் திட்டங்களையும் கூறும் அழகிரி அ.தி.மு.க. ஆட்சி வந்ததும் தனது சாதனைகளை நிறுத்தி விட்டதாக புலம்பிக்கொள்கிறார். முக்கியமாக அவரது கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதை தெரிவிக்கிறார். பா-வரிசை படங்களில் பண்ணையார்கள் உப்பரிகையிலிருந்து வீசும் சில்லறைகளின் கருணை, காலத்தால் பிந்தியதென்றாலும் அழகிரி அங்கேயே நிற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் உலகமய கால கட்டத்தில் அடாவடி அரசியலோ, ரவுடித்தனமோ இன்றி மாபெரும் ஆதாயங்களை சட்டபூர்வமாகவே சுருட்ட முடியும் என்பதால் அழகிரியின் அதிரடி அரசியல் சமன்பாடு இனி வேலையில்லை என்பதே, இந்தச் சண்டையில் அவரது தோல்விக்குரிய தத்துவ விளக்கம்.

மு.க.ஸ்டாலினது அரசியல் செயற்பாடு ஒரு வகையில் கார்ப்பரேட் உலகின் அலை வரிசையில் வருவது தற்செயலான ஒன்றல்ல.

தனது அறிவின்மையை விஞ்சும் விசயமாக அள்ளி வழங்கும் வள்ளல் குணத்தை அரணாக வைத்திருக்கிறார் அழகிரி. அதை வைத்தே ஆதரவாளர் கூட்டத்தை பெருக்கியும், கைதட்டவும் வைக்க முடியும் என்று அவர் நம்புகிறார்.

எடுபிடிகளால் எற்றி விடப்பட்ட அழகிரிக்கு தன்னிடம் ஏதோ ஒரு மாஜிக் உள்ளதாகவும் அதனால், தி.மு.க.விற்கு வாழ்வு கிடைப்பதாகவும் நம்புகிறார்.

இதை சரியாக கூறுவதென்றால், தி.மு.க. ஆட்சி செல்வாக் கில் அழகிரி வளர்த்த எடுபிடிகள் பலர் தொழிலதிபர்களாக, மாபெரும் புரோக்கர்களாக, கல்வி முதலாளிகளாக, அதிகார மையங்களாக வளர்ந்திருக்கிறார்கள். இப்படி அவரால் வளர்க்கப்பட்டவர்கள் அழகிரியை அஞ்சா நெஞ்சன் என்று ஏற்றிவிடுகிறார்கள். இது வாலாட்டும் கூட்டம், நாளையே ஸ்டாலின்தான் ஆள் என்றால், நைசாகவோ, நெற்றடியாகவோ முகாம் மாறிவிடுவர்கள் என்பது அழகிரிக்கு அப்போது தெரிந்திருக்காது. இப்போது தெரிந்தே ஆகவேண்டியிருக்கும்.

இப்படி அடிவருடிகளால் ஏற்றிவிடப்பட்ட அழகிரிக்கு தன்னிடம் ஏதோ ஒரு மஜிக் இருப்பதாகவும் அதனால் தி.மு.கவிற்கு வாழ்வு கிடைப்பதாகவும் நம்புகிறார். இதற்கு தோதாகவே முந்தைய ஆட்சிக் காலத்தில் வந்த இடைத் தேர்தல்களில் தி.மு.க. வெற்றி பெறுகின்றது. ஒவ்வொரு தேர்தலும் அழகிரி சொன்ன வாக்கு வித்தியாசத்தின் படியே முடிவுகள் வெளியாகின்றன. திருமங்கலம் சமன்பாடு என்பதாக அழகிரியின் வெற்றி கொண்டாடப்படுகிறுது. எனினும் இந்த சமன்பாட்டை கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தலில் முதலில் கண்டு பிடித்தவர், புரட்சித் தலைவி என்பது வேறு விடயம். இதைப் பார்த்து பூரித்துப் போன கருணாநிதி இந்தா பிடிமகனே என்று தென்மண்டல அமைப்புச் செயலாளர் பதவியை அழகிரிக்கு அளிக்கிறார். இதன் பின்னர் அழகிரி தனது வாலாட்டும் வட்டத்தை தென் மாவட்டங்களுக்கு விரிக்கிறார்.

ஜனநாயகத்திற்கு கட்டுப்படாமல் அழகிரி செய்த தேர்தல் வேலைகளை கொண்டாடிய கருணாநிதி இன்று அதே அழகிரி உட்கட்சி ஜனநாய கத்தை மதிக்கவில்லை என்று கண்ணீர் வடிக்கிறார். சென்ற சட்டமன்றத் தேர்தலில் அழகிரி முழு வீச்சுடன் செயல்பட்டாலும். தி.மு.க மாநிலம் முழுக்க தோற்று விட்டது. அந்த தேர்தலோடு அ.தி.மு.க. எனும் கட்சி காலி என்று முழங்கிய அழகிரியின் நெஞ்சம் எப்படி அஞ்சி சாகும் என்பது பிறகு அம்மா போட்ட வழக்குகளில் தெரியவந்தது.

பிறகு தி.மு.க. எனும் கட்சி அமைப்புகளில் அழகிரியின் பிடியும் தளர்ந்து வந்தது. தனது சொத்துப்பத்துக்கள், குடும்பத்தினரை ஜெயலலிதாவின் பொலிசிடமிருந்து பாதுகாப்பதிலேயே ஒடுங்கிப் போன அழகிரியை விட்டு அவரது எடுபிடிகள் தப்பித்ததில் வியப்பில்லை.



மேலும், என்னதான் அழகிரி, இப்போது தோற்றுப் போனாலும் அவர் கருணாநிதியின் மூத்த புத்திரன். என்பதால், என்றும் அவர் தி.மு.க.வில் ஒரு அதிகார மையமாக இருப்பார் என்ற வகையில் ஒரு சில அடிப்பொடிகள் இன்றும் அவருடன் உறவைப் பராமரிக்கலாம். மற்றைய தி.மு.க. பெருந் தலைகளும் அந்த வகையில் அழகிரியை ஒரேயடியாக உதறிவிட முடியாது. எனினும் ஸ்டாலின் முன்பு போல பீதியில் இருக்க வேண்டிய தில்லை. இனி எந்த எதிர்ப் புக்கும் இட மின்றி அவர்தான் அடுத்த தலைவர். அதை கருணாநிதியே மறுத்தாலும் நடக்காது.

இப்போது அழகிரி வெளியேற்றத்தை வைத்தாவது தே.மு.தி.க. கூட்டணிக்கு வந்து- எதிர் வரும் தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற வேண்டும். மத்திய ஆட்சியில் இடம் பிடிக்க வேண்டும் என்பதெல்லாம் கூட தி.முக. ஆவலுடன் எதிர்பார்க்கும் கனவுகள், அப்படியும் கேப்டன் கவிழ்த்து விட்டார். என்றால், அழகிரி வீட்டில் பிரியாணி சாப்பிடுவதற்கு கூட்டம் அலை மோதும். எனவே, அழகிரி நீக்கத்திற்கு நீண்ட கால நோக்கம் இருப்பது போலவே உடனடி ஆதாயமும் கூட இருக்கிறது.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குளநீர் குடிநீராக யாழ்.குடாநாட்டுக்கு!

யாழ்.குடா நாட்டுக்கு இரணைமடுக்குள நீரை குழாய் மூலம் எடுத்து குடிநீராக யாழ்குடா மக்களுக்கு விநியோகம் செய்ய முற்படுவது ஒரு தவிர்க்க முடியாத செயல் திட்டமா? என்ற கேள்வியை எழுப்பி இது பற்றி பரிசீலனை செய்வதற்காக வடமாகாண முதலமைச்சரினால் அமைக்கப்படும் விசாரணைக்குழுவிற்கு இந்த குறிப்புகள் சமர்ப்பணம்

1.யாழ்குடா நாட்டில் குடிநீர் அவசியம் தேவைப்படும் கிராமங்கள் இணங்கானப்பட்டுள்ளனவா? அவையின் பட்டியல் உண்டா?

2.யாழ்குடா நாட்டில் நிலக்கீழ் நீர் உவர் நீராக மாறியுள்ள (Salinity) கிராமங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா? அவையின் பட்டியல் உண்டா?

3.யாழ் குடா நாட்டில் நீர் மாசுபட்டிருக்கும் ( Pollution) கிராமங்களின் பகுதிகள் இனங்காணப் பட்டுள்ளனவா? அவையின் பட்டியல் உண்டா?

4.யாழ் குடா நாட்டில் மழைநீர் சேமிப்பினால் உவர்நீரை நன்னீராக்கும் செயற்திட்டங்கள் முழு அளவில் செயற்படுத்தப்பட்டுள்ளனவா?

5.யாழ் குடாவில் நீரில் பொஸ்பேற் நைற்றிறேட் போன்றவற்றின் செறிவுக்கு அல்லது கூடுதலாக காண ப்படுவதற்கு என்ன காரணங்கள் என்பது விஞ்ஞானரீதியாக தெளிவாக்கப்பட்டுள்ளதா? விஞ்ஞான ஆய்வு அறிக்கை உண்டா?

6.அவை பயிர்களுக்கு இரசாயன பசளை பாவிப்பதால் ஏற்படுகின்றதன் விளைவு என்பதாலேயே எனக் கண்டறியப்படுவதால் இரசாயனப் பசளை பாவிப்பதிலிருந்து விடுபட்டு மாட்டெரு, கூட்டெரு, பசுந்தாழ் பசளை போன்றவற்றை விவசாயிகளிடம் ஊக்குவிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

7.யாழ் குடா நாட்டில் குழாய் கிணறுகள் அமைப்பதால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கூடிய நீர் உறிஞ்சி எடுக்கப்படுவதன் காரணமாக நீர் மாசுபடுதலும் உவர் தன்மை அடைவதும் ஏற்படுகின்றதென்பது விஞ்ஞானரீதியாக அறியப்படுகின்றதா?

8.அவ்வாறாயின் குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதை இதுவரையிலும் தடை செய்யாமல் இருப்பது ஏன்?

9.நல்லூர், வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தென்மேற்கு , வலிகாமம் கிழக்குப் பகுதியின் மேற்குப்பக்கம் போன்ற பிரதேச சபையின் பகுதிகளில் உவர் நீர் தன்மை காணப்படுகிறதா?

10.தற்போது திருநெல்வேலியில் இருந்தும் கோண்டாவிலிருந்தும் யாழ் நகர் பகுதிக்கு நன்னீர் குழாய் மூலம் விநியோகிக்கப்படுவதில் குறைகள் உண்டா? இந்நீர் மாசு பட்டதாக அல்லது உவராக காணப்பட்டதா?

இந்த விபரங்களை கொண்ட விஞ்ஞான ரீதியாகவும் புள்ளி விப்ரங்களோடும் விபரத்திரட்டு ஒன்றை தயாரிக்காது யாழ் குடா நாட்டிற்கு சுத்த நீர் இரணைமடுவில் இருந்து பெறப்பட வேண்டும் என்று எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

மறுபக்கமாக சிந்திப்போமானால் இரணைமடுக் குளத்திலிருந்து குழாய் மூலம் யாழ்குடா நாட்டிற்கு குடிநீர் கொண்டு வந்து விட்டதாக இருக்கும் நிலைமையில் இவ்வருடம் வடமாகாணத்திற்கு மாரிமழை பொய்த்துள்ளதை போன்று ஒரு நிலைமை ஏற்பட்டால் வழமையாகப் பெறும் குடிநீர் யாழ்மக்களுக்கு தொடர்ச்சியாக கிடைக்காத போது வேறு எந்த மாற்றுவழியில் குடிநீரை அச்சமயம் இம்மக்களுக்கு கொடுக்க முடியும் என்பதற்கு எவராவது தகுந்த பதிலை தர முடியுமா?

மின்சாரம் தடைப்பட்டால் மெழுகுதிரியுடன் காலத்தை போக்கலாம். ஆனால் குடிநீர் தொடர்ந்து மாதக்கணக்கில் இல்லாத போது. கிணற்று நீரும் மாசுபட்டதாக கைவிடப்பட்ட நிலையில் குடிநீருக்கான மாற்று ஏற்பாடு என்ன?

அவ்வாறான நிலைமைகளில் அநுராதபுரத்திலிருந்து மகாவலி நீரையோ அல்லது வேறு எந்த நீரையோ குடமுறுட்டி ஆற்றின் மூலமாகவும் கனகராயன் ஆற்றின் மூலமாகவும் இரணைமடுக் குளத்திற்கு கொண்டுவரப்படுமாயின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் காணி சம்பந்தமான நிரலில் இரணைமடுக்குளத்தின் கீழ் நீரைப் பெறும் சகல விவசாயக் காணிகளும் மத்திய அரசின் அதிகாரத்தினுள்ளும் கட்டுப்பாட்டினுள்ளும் போய் சேரக்கூடிய சாத்தியம் இல்லை என எவராவது கூறமுடியுமா?

இந்த இரணைமடுக்குளப் பாய்ச்சல் நிலங்கள் மாகாணசபைக்குரிய அதிகார ஆதிக்கத்திலிருந்தும் மாகாண நீர்ப்பாசன திட்டத்திலிருந்தும் பறிபோகின்ற நிலமையால் மாகாண சபைக்குரிய ஆட்புல நிலங்கள் குறுகி விடாதா?

காணி அபிவிருத்தி சட்டத்தின் கீழாக கொடுபட்ட நிலங்களின் உரிமை மாற்றங்கள், காணி கச்சேரி மூலம் பகிர்ந்தளித்தல், குடியராமை, திருத்தப்படாமை போனற காரணிகளால் உரித்து இரத்துச் செய்யப்படுதல், அக்காணிகளுக்கு புதியவர்களை தெரிவு செய்து குடியமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளினாலேயே செய்யப்பட வேண்டிய பணியாக இருக்கும். அவ்வாறான நிலைமைகளில் திருகோணமலையில் பன்குளம் என்ற தமிழ் குடியேற்றம் எவ்வாறு மொரவெவ என்ற பெயரோடு சிங்கள குடியேற்றமாக மாற்றப்பட்டதை போன்று காலப்போக்கில் இரணைமடுவுக்கும் அந்நிலைமை ஏற்பட குடிநீர் விநியோகத்தினால் ஆரம்பிக்கப்படுகின்றதா?.

யாழ்குடா நாடு இலங்கை வரைபடத்தில் தலை போன்று அமைந்திருப்பதும் அந்த பகுதியிலேயே சிறந்த மேட்டுப்பயிர் செய்கைக்கான செறிவான விளைநிலங்கள் இருப்பதும் அவை பரம்பரை பரம்பரையாக செய்கை பண்ணப்பட்டு வந்ததும் அத்துடன் அந்த பகுதியிலேயே வடகீழ் பகுதிகளை பொருளாதார ரீதியில் சீர்திருத்தி அமைக்க திட்டமிடக்கூடிய பல அதிகாரிகள் உருவாகியதும் அந்தப் பகுதிகளிலேயே தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட போராடிய தலைவர்கள் பிறந்து வந்துள்ளனர் என்பதையும் ஊன்றி கவனிக்க வேண்டியது இந்த குடிநீர் பிரச்சினையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த செம்மல்களை உருவாக்கிய பொன்விளையும் பூமியின் இயற்கை வளங்களை பாதுகாக்காது - மழைநீரினைப் பயன்படுத்தி நன்னீராக்காது - பிறபகுதியில் இருந்து குடிநீரைப் பெறுவதன் மூலம் கவனிப்பாரற்று விடப்பட்டு உவர்நீரையும் உவர்மண்ணையும் கொண்ட பயிர்களை வளர்க்க முடியாத ஒரு பாலைவனமாக மாற்றமடைவதற்கு இக்குடி நீர் வருகை உதவிவிடும்.

நீர்ப்பாசன அத்தியட்சகராக இருந்தவரான டாக்டர் ஆறுமுகம் முன்னெடுத்த மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா? அன்னாரின் சிபாரிசின் அடிப்படையில் தொடங்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அரைகுறையாக இருப்பதற்கும் நிறைவேற்றப்படாததற்கும் முடிவுறாதிருப்பதற்கும் காரணங்கள் அறியப்பட்டுள்ளதா?

இரணைமடுக் குளத்திலிருந்து நீரை யாழ்குடா'நாட்டிற்கு கொண்டுவராது அதற்கு செலவு செய்யப்படும் பணத்தை யாழ்குடா நாட்டிலுள்ள மூன்று கடல் ஏரிகளையும் நன்னீராக்கியும் தூர்ந்துள்ள குளங்கள், சுனைகள், குட்டைகள் கேணிகள் யாவற்றிலும் மழை நீரை தங்கவைக்க கூடிய ஏற்பாடுகளை செய்தும் ஒவ்வொரு வீட்டுக்கழிவு நீரும் அதே வளவில் குழிகளின் மூலம் மீள நிலத்தின் கீழ் கொண்டு செல்லக்கூடியதான வழிவகைகளைச் செய்தும் (Recharging) மேலும் குழாய் கிணறுகள் அமைப்பதை முற்றாக தடை செய்தும் குடாநாட்டின் தண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும் என்ற வல்லுநர்களின் ஆலோசனையை ஏற்று நடப்பதற்கு மாகாணசபை உறுதி செய்ய வேண்டும்.

**கனக நமநாதன்**
**சட்டத்தரணி,**
**ஓய்வுநிலை உதவிக் காணி ஆணையாளர்.**

# ராஜீவ் கொலை குற்றவாளிகளின் கருணை மனுக்களை விசாரிப்பதில் தாமதம் ஏன்?

## வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி வாதம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, கருணை மனுக்கள் நிராகரிக்கப் பட்டிருந்த பேரறிவாளன், சாந்தன், முருகன் மரண தண்டனையை இரத்து செய்யக்கோரி தொடுத்து இருந்த ரிட் மனு மீதான விசாரணை, உச்ச நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் வாதாடிய வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி கூறியதாவது,


சாந்தன், முருகன், பேரறிவாளன் போன்றோரின் கருணை மனுக்கள் 11 வருடங்கள் 4 மாதங்கள் எந்த முடிவும் எடுக்காமல் தாமதம் செய்ததற்கு மத்திய அரசு எந்த விளக்கமும் காரணமும் கூற முடியாது. உள்துறை அமைச்சகத்தில் 5 வருடங்கள் 6 மாதம் கருணை மனுக்கள் எந்த அசைவும் இல்லாமல் இருந்தன. அது போலவே, குடியரசுத் தலைவரிடம் 5 வருடங்கள் 6 மாதம் எந்த நகர்வும் இன்றிக் கிடந்தன. நியாயப் படுத்த முடியாத இந்தக் காலதாமதம் ஒன்றே இந்த மூவரின் மரண தண்டனையை இரத்து செய்வதற்கான அடிப்படையாகும்" எனக் கூறினார்.

மத்திய அரசு தரப்பு வழக்கறிஞர், தங்கள் வாதங்களைச் சொல்ல அவகாசம் கேட்டார். பெப்ரவரி 4ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஏற்கனவே, இந்த மூன்று தமிழர்களின் மரண தண்டனையை இரத்து செய்ய சென்னை உயர் நீதிமன்றத்தில் 2011 ஒகஸ்ட் 30இல் ராம்ஜெத்மலானி வாதாடியதன் பேரில், தூக்குத் தண்டனைக்குத் தடை விதிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில், வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கக் கூடாது என்றும், டில்லி உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என்றும் கோரப்பட்ட விண்ணப்பத்தால் வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

ஜனவரி 21 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி அமர்வில் 15 பேரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்த போது, கருணை மனுக்கள் மீதான முடிவு எடுப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தையே நீதிபதிகள் காரணமாகக் கூறி இருப்பதால், மூன்று தமிழர்களின் மீதான தூக்குத் தண்டனையும் நிச்சயமாக இரத்து செய்யப்படும் என்று, ராம் ஜெத்மலானி தன்னிடம் கூறியதாக இன்று உச்ச நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது பங்கேற்ற வைகோ தெரிவித்தார். (அ-2)






**சனச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளை ஆரம்பித்து 4 ஆவது வருட நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. வங்கியீன் யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் சபேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் ரி. வேல் நம்பி கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். (படங்கள்: எஸ்.ஆர்.கரன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-சவுதி நாடுகளுக்கிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம்



இந்தியா-சவுதி அரேபியா இடையே அடுத்த மாதம் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப் பந் தம ஒன்று கையெழுத் தாகு மென இந்தியமைச்சர் ப.சிதம் பரம் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய இளவரசர சாலமன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் சலமான் பின் அப்துலாஜிஸ் ஆகியோர் அடுத்தமாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள் கின்றனர்.

அப்போது இந்தியா-சவுதி அரே பியா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என இந்திய நிதியமைச்சர் கூறினார்.

சவுதி அரேபியாவில் இர ண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிதம்பரம் ரியாத்தில நிருபர்களிடம் கூறு கையில்,

இருநாடுகளுக்கு இடை யேயான புரிந்துணர்வு ஒப் பந்தம் அடுத்தமாதம் கையெ ழுத்தாகும். இவ்வொப்பந்தத்தில் பாதுகாப்பு தொடர்பான தக வல்கள் பரிமாற்றம், இராணுவ பயிற்சி மற்றும் கல்வி ஆகியவை இடம்பெறும்.

தகவல் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்பு துறைகளில் நடை பெறும் குற்றங்களையும் போதை மருந்து நடவடிக்கை களையும் இது கட்டுப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார். பத்திரிகையாளர் சந்திப்பின் போது சிதம்பரத்துடன் சவுதி அரேபிய வணிக மற்றும் தொழி ல்துறை அமைச்சர் தவ்பீக் அல் ரபையா உடன இருந்தார்.

இந்தியா-சவுதி அரேபியா இடையேயான உறவு கடந்த வருடங்களில் இருந்து சிறப்பாக அமைந்துள்ளது. (2)

## தமிழக மீனவர்களுக்கு உதவுவதுபோல் சுஷ்மாவின் நாடகம் அமைந்துள்ளது



### நாச்சியப்பன் தெரிவிப்பு

தமிழக மீனவர்கள் இலங்கை கடற் படை யால் தாக்கப்படுவதை கண்டித்து மீனவர்களுக்கு ஆதரவாக கடல்தாமரை என்ற போராட்டத்தை பா.ஜனதா நேற்றைய தனம் இராமேஸ்வரத்தில் நடததியுள்ளது.

இந்த போராட்டத்துக்கு சுஷ்மா சுவராஜ் தலைமை தாங்கி யுள்ளார். இப் போராட்டம் பற்றி நேற்று சென்னை வந்த மத்திய அமைச்சா சுதர்சன நாச்சியப்பனிடம் நிருபர்கள் கேட்டனர். அதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது,

இருநாட்டு மீனவர்கள் பிரச்சினை பற்றி சுஷ்மா சுவராஜ"க்கு நன்றாகவே தெரியும். அவர் இலங்கை அரசுடன் நெருங்கிய நட்பு வைத்துள்ளார். காங்கிரஸ் எம்.பி.க்கள் கலந்து கொள் ளாத போதும் இலங்கை ஜனாதிபதி அழைப்பை ஏற்று இல ங்கை சென்று வந்தவர்.

அந்த அளவுக்கு இலங்கை அரசுடன் நெருங்கிய நட்பு வைத்து ள்ளார். இப்போது தமிழக மீனவர்களுக்கு உதவுவது போல் தேர்தலுக்காக அவர் ஆடும் நாடகம்தான் இந்த போராட்டம். மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இருநாட்டு மீனவர்களும் சந்தித்து பேசி இருக்கிறார்கள்.


துறைமுக பகுதிகள் தவிர இதர பகுதிகளில் மீன்பிடிக்க ஒப்பந்தம் பேசி இருக்கிறார்கள். அதுவரை இருநாட்டு அமைச்சர்களோ, அதி காரிகளோ இன்னும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை. இந்த பிரச்சினைக்கு விரைவில் சுமுக உடன்பாடு ஏற்படும். ஆனால் அதை உடைக்க சிலர் முயலுகிறார்கள். தமிழ்நாட்டில் காங் கிரஸ் தனித்து விடப்படவில்லை. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் உள்ளது. எங்களோடு வரும் கட்சிகளோடு நாங்கள் நிச்சயம் கூட்டணி அமைப்போம் என அவர் கூறினார். (2)



ஈரானிற்கு வருகை தந்திருந்த துருக்கி பிரதமர் ரீசெப் தைப்பி அந்நாட்டு ஜனாதிபதி ஹ"சைன் ரவுஹானி டெஹ்ரானில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# ஒப்பந்தத்தில் ஆப்கான் கையெழுத்திட வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து



**(வோஷிங்டன்)**

**பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஆப் கான் விரைவில் கையெழுத்திட வேண்டும் என அமெரிக்கா வலி யுறுத்தியுள்ளது.**

தங்கள் படைகள் 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானில் நீடிக்க வேண்டுமெனில், இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சில வாரங்களுக்குள் அந்நாடு கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித் துள்ளது.

இது குறித்து அமெரிக்க துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் கூறியதாவது,

ஆப்கானிஸ்தானில் நடை பெறவுள்ள தேர்தல் வரை ஒப்பந்தத்தை தாமதப்படுத் துவதை அமெரிக்கா விரும் பவில்லை.

இந்த ஆண்டுக்குப் பின் அமெரிக்கப் படைகளை அங்கு நிறுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தாலும் பாது காப்பு ஒப்பந்தத்தில் அந்நாடு விரைவில் கையெழுத்திடா விட்டால் படைகள் நீடிக்காது என்பதை அமெரிக்க ஜனாதி பதி பராக் ஒபாமா திட்டவட்ட மாகத் தெரிவித்துளளார்.

ஆப்கானில் எவ்வளவு படைகளை தொடர்ந்து இருக்கச் செய்வது என்பது குறித்து நாங்கள் தீர்மானிப்பதற்கு முன்பாக இருதரப்பு ஒப்பந் தத்தில் கையெடுத்திடும் நாளை அறிய வேண்டியது அவசிய மாகும் என்று பென்ரோட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆப்கானில் முகாமிட் டுள்ள நேட்டோ நாடுகள் தலைமையிலான 58 ஆயிரம் படைகள் படிப்படியாக இந்த ஆண்டு இறுதிக்குள் வெளி யேறவுள்ளன.

இந்நிலையில், தலி பான் தீவிரவாதிகளின் பயங்கர வாதச் செயல்கள் மீண்டும் தலைதூக்குவதை தடுக்கும் வகையில், அமெரிக்கப் படை யின் 10ஆயிரம் வீரர்கள் 2015ஆம் ஆண்டு வரை அங்கு தங்கியிருந்து அந்நாட்டு படையினருக்கு போர்ப் பயி ற்சி மற்றும் ஆயுத உதவி களைச் செய்வதாக அமெரி க்கா முன்மொழிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் எதிர்வரும ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி அந் நாட்டில் பொதுத்தேர்தல் நடை பெற இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி கர்சாய் மூன் றாவது முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட சட்ட விதிமுறைகள் அனுமதிக்காத நிலையில் 11 புதிய வேட் பாளர்கள் இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றார்.

இந்தத் தேர்தல் நடவடிக் கைகள் நாளை ஞாயிறன்று முழுவீச்சில் தொடங்க உள் ளது.

நேட்டோ வீரர்கள் எதிர்வரும் டிசம்பரில் முழுவதுமாக விலக உள்ள நிலையில், அமெரிக்க துருப்புகளின் உதவியும கர்சா யின் தயக்கத்தினால் தடைப் படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கர்சாயைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவியை ஏற்பவர் அமெரிக்க வீரர்கள் நீடித்தி ருப்பது குறித்த பேச்சுவார்த் தைகளை மேற்கொள்ளக் கூடும் என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையானது மீண்டும் ஆரம்பித்துள்ள தலிபான்களின் தாக்குதலை வெளிநாட்டு வீரர்கள் இல்லாமல் ஆப்கா னிஸ்தான் எதிர்கொள்ள வேண்டும் என்பது மட்டுமி ல்லாமல் அமெரிக்க அரசை யும் போருக்குப் பிந்தைய திட்டம் குறித்து எந்த முடி வையும் எடுக்க இயலாத நிலைக்குத் தள்ளியுள்ள தாகக் கூறப்படுகின்றது. (2)

## டெசோ கலந்துரையாடல் கூட்டம் இன்று

டெசோ அமைப்பின் கலந்து ரையாடல் கூட்டம் இன்று சனிக கிழமை காலை 10.30 மணி க்கு சென்னை அண்ணா அறி வாலயத்தில் கூடுகிறது.

கூட்டத்துக்குத் திமுக தலை வர் கருணாநிதி தலைமை தாங்கவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று இக் கூட்டத்தில் வலியுறுத்தப் பட உள்ளது.

திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி. விடுதலைச் சிறுத்தைகள் கட சித் தலைவர் தொல். திருமா வளவன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் உள்ளிட டோர் பங்கேற்கின்றனர். (2)

# உக்ரைன் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்; நிபந்தனைகளை ஏற்க எதிர்க்கட்சி மறுப்பு



உக்ரைனில் போராட் டத்தில் ஈடுபட்டுக் கைது செய் யப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்க அந்நாட்டு எதிர்க்கட்சி மறுத்துவிட்டது.

மேலும், ஜனாதிபதி விக் டர் யானுகோவிச் பதவி வில கும் வரை போராட்டங்கள் தொடரும் என்றும் நேற்று முன்தினம் அறிவித்தது.

ஐரோப்பிய யூனியனுடன் உக்ரைன் இணைய வேண் டும் என்றும், ஜனாதிபதி விக டர் யானு கோவிச் பதவி வில கக்கோரியும் அந்நாட்டின் தலைநகர் கீவில் கடந்த 2 மாதங்களாக எதிர்க்கட் சியி னர் தொடர் போராட் டங்க ளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து போராட் டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் பல் வேறு நடவடிக்கைகளை எடு த்தார். போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட அனைவ ருக்கும் பொது மன்னிப்பு அளிக்கும் வகையில், நாடா ளுமன்றத்தில் ஆளும் ரீஜிய ன்ஸ் கட்சி ஆதரவுடன் மசோதா கடந்த புதன் கிழமை நிறை வேற்றப்பட்டது.

உக்ரைன் பிரதமர் மிகோலா அகாரோவின் இராஜினாமா வையும் விக்டர் யானுகோ விச் ஏற்றுக் கொண்டார்.

ஆனால், ஜனாதிபதியின் நிபந்த னைகளை எதிர்க் கட்சி நிராகரித்து விட்டது. ஜனாதிபதி பதவி விலகும் வரை போராட்டங்கள் தொட ரும் என்றும் எதிர்க்கட்சியி னர் அறிவித்துள்ளனர்.

இதனிடையே, உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானு கோவி ச்சை ஐரோப்பிய யூனியன் அமைப்பின் வெளி யுறவுக் கொள்கைப் பிரிவு தலைவர் கேத்தரின் ஆஷ்டன் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பிற்குப் பின்பு செய்தியாளர்களை சந்தித்த கேத்தரின் ஆஷ்டன், இரு தரப்பும் பேச்சுவார்த்தையை தொடங்க இதுவே தகுந்த நேரம் என்று கூறினார்.

மேலும, தொடரும் வன்முறை கள் மற்றும் அடக்கு முறை கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் வேண்டு கோள் விடுத்தார்.

இந்நிலையில், உக் ரைன நிலவரம் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், ஜேரமன்பிரதமர் ஏஞ்சலா மெர் கலுடன் கடந்த புதன்கி ழமை ஆலோசனை நடத்தினார.

அதன்பின் ரஷ்ய ஜனா திபதி மாளிகையில் இருந்து ஓர் அறிவிப்பு வெளியிடப் பட்டது. அந்த அறிவிப்பில், உக்ரைன் விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிடு வதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தினால் நடவடிக்கை

## கடற்றொழில் அமைப்புகளுக்கு கடிதம்

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் கடல் நீரேரியில் பயன்படுத்தப்படும் தடை செய்யப் பட்ட வலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் நீரியில் வளத்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள தாக முல்லை.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இதின்படி குறித்த கடல் நீரேரியில் தடைசெய்யப்பட்டுள்ள மீன்பிடி நடவடிக்கைகளாக 85 மில்லி மீற்றர் அல்லது 3.5 இஞ்சிக்கு மேற்பட்ட வலைக்கண்களையுடைய வலைகள், சூழ் வலை, கரைவலை, இழுவை வலை, முக்கூட்டு வலை, தங்கூசி வலை, இயந்திரங்களின் உதவியுடன் மீன்பிடித்தல் போன்றன தடைசெய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இவ் விடயம் அடங்கிய பிரதிகளை கொக்கிளாய் கருநாட்டுக் கேணி, கொக்குத் தொடுவாய் கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புகளுக்கும் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் முல்லை.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார். (அ-9-267)

# பொதுக் கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய 63 ஆவது ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறவுள்ளதாக சனசமூக நிலைய செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-10)

# ஜெனீவாவை இலக்கு வைத்து முஸ்லிம் காங்கிரசும் சதி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தை இலக்கு வைத்து சதித்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தச் சதித்திட்டத்தின் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 30 வருட போரில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான அரசாங்கத்தின் புள்ளி விபரங்களுக்கு பதிலாக தனியான நிறுவனம் ஊடாக புள்ளிவிபரங்களை திரட்டுமாறு கோரி வருகிறது என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்..

அரசாங்கம் மேற்கொண்டு வரும் கணக்கெடுப்புக்கு பதிலாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஊடாக அதனை மேற்கொள்ள வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுள்ளது. இதன் மூலம் ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கும் நோக்கில் அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டு வரும் கணக்கெடுப்புகள் பொய்யானது என காரணம் காட்டும் முயற்சிகளில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


# பிரிவுத்துயர் பகிர்வு



### பிரதாபன் நமசிவாயம்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பிரதாபன் நமசிவாயம் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 8.30 மணிக்கு Hendon Cemetery & Crematorium, Holders Hill Road ,London NW7 1NB , United Kingdom என்னும் முகவரியில் நடைபெறும்.



### தம்புராசா தியாகர்ராஜா

வவுனியா பெரியபுளியங்குளத்தை பிறப்பிடமாகவும் சாஸ்திரிகூழாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்புராசா தியாகராஜா கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாஸ்திரிகூழாங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பரிபூரணம் சின்னத்துரை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட பரிபூரணம் சின்னத்துரை கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பிற்பகல் 12.30 மணிக்கு St Jon"s Dixie Cemetery & Crematorium ,737 Dundas Street East ,Mississauga,on L4Y 2B5,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் அதே இடத்தில் தகனம் செய்யப்படும்.



### சிவபூலோகசுந்தரம் மயில்வாகனம்

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும் கனடா mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவபூலோகசுந்தரம் மயில்வாகனம் கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 11.30 மணிக்கு Chapel Ridge Funeral Home,8911 Wood bine Ave,Markham,On ,L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சரவணமுத்து சோமசுந்தரம்

கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சோமசுந்தரம் கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்துரை ஸ்ரீரங்கநாதன்

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை ஸ்ரீரங்கநாதன் கடந்த 24 ஆம் திகதிவெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு தம்பிலுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெற்று பூதவுடல் மட்டக்களப்பு தம்பிலுவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# ஜெனீவா செல்வதற்கான அழைப்பை நிராகரித்தார் ஜெனரல் சுஹத கம்லத்

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் இலங்கை பிரதிநிதிகள் குழுவில், இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் விடுத்த கோரிக்கையை மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் நேரடியாகவே நிராகரித்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

எதற்கு நாம் ஜெனீவா செல்கிறோம்?. அங்கு போய் நாம் என்ன சொல்ல போகிறோம்?. நல்லிணக்க ஆணைக்குழுவின் எத்தனை பரிந்துரைகளை நாம் அமுல்படுத்தியுள்ளோம்?.

"ஜெனீவாவில் இருப்பவர்கள், இங்குள்ள வாக்காளர்களை போல் பாடும் பைலாவுக்கு ஏமாறும் நபர்கள் அல்ல.

வெட்கத்தை மறைக்கவே நான் காற்சட்டை அணிகிறேன். மற்றவர்கள் அணிந்துள்ளனர் என்பதற்காக நான் அதனை அணியவில்லை.

இதனால் காற்சட்டை அணிந்து கொண்டு என்னால் ஜெனீவாவுக்கு செல்ல முடியாது என தெரிவித்துள்ள சுஹத கம்லத், ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கையை முற்றாக நிராகரித்துள்ளார்.

இலங்கையில் அனுபவமிக்க இராஜதந்திரிகள் இருக்கும் போது அவர்கள் அனைவரையும் புறந்தள்ளி விட்டு, ஜெனீவா தூதுக் குழுவிற்கு தலைமை தாங்கும் பொறுப்பு உத்தியோகபூர்மற்ற வெளிவிவகார அமைச்சர் எனக் கூறப்படும் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு வழுங்கப்பட்டுள்ளது.


இவருக்கு உதவியாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் ஜனாதிபதியின் புதல்வரான நாமல் ராஜபக்ஷவும் ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர், ஜெனீவா மாநாட்டில் இராஜதந்திர ரீதியாக செய்வதற்கு எதுவுமில்லை என்பதால் பேரம் பேசியாவது சாதித்து கொள்ளலாம் என்ற நோக்கத்தில் ஜனாதிபதி, சஜின் வாஸ் குணவர்தனவை ஜெனீவாவுக்கு அனுப்புவதாக தெரிவித்தார்.

இராஜதந்திர துறையில் பேரம் பேசும் முறையை அறிமுகப்படுத்திய பெருமை உத்தியோகபூர்வமற்ற வெளிவிவகார அமைச்சர் சஜின் வாஸ் குணவர்தனவை சாரும் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

# முதன் முதலாக சொந்த தமிழ் திருமறையில் குடமுழுக்கு

(மானிப்பாய்)



மாதகல்- சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் சிவதொண்டர் அமைப்பால் அமைக்கப்பட்ட வடமாகாணத்திலேயே உயரமான, சிவபெருமானின் 21 அடி உயர தியான திருச்சொரூபத்திற்கான திருக்குடமுழுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் செந்தமிழ் திருமறையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் செந்தமிழில் சிவதீட்சை வழங்கும் வைபவமும் , சிவ நற்பணி மன்றங்களின் அறப்பணிச் செயற்றிட்டங்களில் இணைந்துகொள்ள விரும்புவோர் சிவதொண்டர்களாகவும் சிவ மங்கையர்களாகவும் உறுதிப்பிரமாணம் எடுத்து இணைந்துகொள்ளும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, சம்புநாதஈஸ்வரர் ஆலயத்தைச் சூழவுள்ள ஆலயங்களில் இருந்த சிவனடியார்களால் ஓம் நமசிவாய மந்திர பாராயணத்துடன பூரண கும்பங்கள் கொண்டுவரப்பட்டு சம்புநாதஈஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்படவுள்ளது.

இலங்கையிலேயே இந்த ஆலயத்திலேயே முதன்முதலாக செந்தமிழ் திருமறையில் திருக்குடமுழுக்கு இடம்பெறவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரபுர மக்களின் விருப்பமின்றி வேறு இடங்களில் குடியமர்த்த கூடாது

## வடக்குமாகாண சுகாதார அமைச்சர்

(குருமன்காடு)

வவுனியா சிதம்பரபுரத்தில் 1992ஆம் ஆண்டிலிருந்து தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வந்த உள்ளக இடம்பெயர்ந்தவர்களின் விருப்பமின்றி அவர்களை வேறு இடத்தில் குடியேற்றம் செய்யக் கூடாது என வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.



வவுனியா சிதம்பரபுரத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர்களின் குறைகளை கேட்டறிந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். உள்ளக இடம்பெயர்வாலும் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களுக்குமான இடைத் தங்கல் நலன்புரி முகாம்கள், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தாபனத்தினால் 1994-1995 காலப் பகுதியில் சிதம்பரபுரம் மற்றும் பூந்தோட்டத்தில் அமைக்கப்பட்டது.

இம்முகாம்களில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் இன்னும் 180 குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி பாழடைந்த தற்காலிக முகாமிலேயே வாழ்ந்து வருகின்ற னர்.

இவர்களை இவர்களது விருப்பத்திற்கு மாறாக வேறு இடங்களில் குடியேற்றுவதற்காக மாவட்ட நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தாம் தொடர்ந்தும் சிதம்பரபுரத்திலேயே வாழவிரும்புவதாகவும் தமக்கு அதே இடத்தில் காணிவழங்குமாறும் மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே இதுதொடர்பாக அடுத்தவாரம் நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தான் கலந்துரையாடி நல்லதொரு முடிவு கிடைப்பதற்கு ஆவன செய்வதாகவும்

படிப்படியாக மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு தன்னாலான முயற்சியை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதத்தில் ஆசிகுளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையான உபதபாலகம் அமைப்பது தொடர்பில், தான் மத்திய தபாற்சேவை அமைச்சரை தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டதற்கிணங்க விரைவில் உபதபாலகமொன்று ஆசிகுளம் சந்தியில் அமைக்கப்படவுள்ளது என்றார். (அ-9-250)

## தொழிற்பயிற்சி வழங்க நடவடிக்கை எடுங்கள்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் மேற்கு, வடக்கு சிவநகர் போன்ற கிராமங்களிலுள்ள பெண்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறிகளை வழங்க சம்பந்தப்பட்டோர் முன்வர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெண்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக பல பிரசேதங்களிலும் பல்வேறு விதமான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

ஆயினும் மேற்குறித்த கிராமங்களில் இவ் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

குறித்த கிராமங்களிலுள்ள பெண்களில் அநேகமானோர் கணவனை இழந்தும் மாற்று வலுவடையோராகவும் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாதவர்களாகவுமே உள்ளனர்.

எனவே, இக்கிராமங்களிலுள்ள பெண்களின் சுய தொழிலை ஊக்கு விக்கும் முகமாக பயற்சிகளை வழங்கிவரும் தொழிற் பயிற்சி அதிகார சபையினரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-9-254)





கரைச்சி பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)




# இந்திய வீட்டுத்திட்டத்தில் பிரச்சினைகள் இருக்காது

## விசேட செயலாளர் சுஜாதா மேத்தா



இந்திய வீட்டுத்திட்டத்தில் பிரச்சினைகள் இருக்காது என்று தான் எண்ணுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் சுஜாதா மேத்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் மேற்கொள்ளப்படுகின்ற இந்திய வீட்டுத்திட்டங்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பார்வையிட்ட பின்னர், வீட்டுத்திட்ட பயனாளிகளுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீடொன்று இருந்தால் அது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமையும் என்பது எமது ஆழ்ந்த நம்பிக்கை. இந்த வீட்டுத்திட்டம் உங்களின் வாழ்க்கையில் மிகவும் சௌகரியமாக அமையும் என நம்புகின்றோம்.

வாழ்க்கையில் திருப்புமுனையாகவும் நல்ல எதிர்காலத்தை நோக்கிச் செல்லவும் இந்திய வீட்டுத்திட்டம் வாய்ப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இந்த நிலையில், வீட்டுத்திட்டத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்திலோ அல்லது தேசிய வீடமைப்பு அதிகார சபையிலோ முறையிட முடியும். இது நாம் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக இருக்கும்.

உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பில் இனிமேல் நாம் செய்யும் வீட்டுத்திட்டத்தை எந்தவித பிரச்சினைகளும் இல்லாது அமைப்பதற்கு வசதியாக இருக்கும் என்றார்.

இந்திய வெளியுறவு அமைச்சின் விசேட தூதுவர் சுஜாதா மேத்தா உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் வவுனியா சாஸ்திரிகூழாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத் திட்டங்களை பார்வையிட்ட பின்னரே இவ்வாறு தெரிவித்தார். (அ-9-250)

# பாடசாலை சத்துணவு வழங்கலுக்கான ஏழுமாத கொடுப்பனவு கிடைக்கவில்லை

## அதிபர்கள் அந்தரிப்பதாக ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)

மகிந்த சிந்தனையின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு கோப்பை பாலுக்கு கடந்த ஏழு மாதங்களாக கொடுப்பனவு வழங்கப்படாமையால் பாடசாலை அதிபாகள் கடன் சுமையில் இருப்பதாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

மகிந்த சிந்தனை மூலம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கோப்பை பால் வழங்கல், மற்றும் உலக உணவுத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் ஒரு கோப்பை பால் வழங்கலுக்கான கொடுப்பனவு, சத்துணவுத் திட்டத்திற்கான இலை மரக்கறிக் கொடுப்பனவு என்பன வடமாகாணத்தின் பாடசாலைகளுக்கு கடந்த யூலை மாதத்திற்கு பின்னர் வழங்கப்படவில்லை. சத்துணவுத்திட்டத்திற்கான அரிசி உள்ளிட்ட பொருட்களினை உலக உணவுத்திட்டத்தின் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றது. அதற்கான இலைமரக்கறி வகைகள் என்பவற்றுக்கு ஒரு மாணவனுக்கு 2 ரூபாய் 50 சதம் வீதம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இக் கொடுப்பனவு கடந்த ஆறு மாதங்களாக வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக சத்துணவுத் திட்டம் வழங்கப்படுகின்ற வடமாகாண பாடசாலை அதிபர்கள் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக மீள்குடியேறியுள்ள வவுனியா, மன்னார், முல்லைத்தீவு பாடசாலை அதிபாகள் அதிகமாக பாதிப்படைந்துள்ளனர்.

இலை மரக்கறி கடைக்காரரும், பால் வழங்குநர்களும் பாடசாலை அதிபர்களிடம் பணத்தினை கேட்டு முரண்படுவதாலும் நெருக்குவாரங்களை கொடுப்பதாலும் பாடசாலை அதிபர்கள் தமது சொந்த ஆபரணங்களை அடைவு வைத்தும், வட்டிக்கு பணம் வாங்கியும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். இதனால் அவர்கள் மாணவர்களுக்கான உணவை தொடர்ந்தும் வழங்க முடியாத நிலையில் உள்ளதுடன் கடனாளிகளாகவும் மாறியுள்ளனர்.

அரசாங்கம் அநாவசியமான செலவுகளை பல மில்லியன் கணக்கில் செலவு செய்து வருகின்றது. ஆனால் இந்த சிறு தொகை பணத்தைக் கூட வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு செலுத்துவதற்கு இயலாத நிலையில் இந்த அரசு இருக்கின்றது. கிராமப்புற மாணவர்கள் வறுமை காரணமாக இப் பாலினையும் சத்துணவினையும் நம்பியே பாடசாலைக்கு சென்று வந்தனர்.

இந்நிலையில் இக் கொடுப்பனவுகள் வ்ழங்கப்படாமையால் அதிபர்களும் தொடர்ச்சியாக வழங்க முடியாதுள்ளனர்.

இதனால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படையக் கூடிய நிலை உருவாகியுள்ளது

எனவே இது தொடர்பான கொடுப்பனவுகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பெற்றுக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(அ-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல் அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின் அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
- ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புற்றுநோய் சிகிச்சைக்காக வருடாந்தம் 25 ஆயிரம் பேர் பதிவு

(கொழும்பு)

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன்படி வருடாந்தம் புற்றுநோய் சிகிச்சைகளுக்காக 25 ஆயிரம் பேர் புதிதாக தம்மை பதிவு செய்து கொள்வதாக சுகாதார கல்வி பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் ஆண்டு தோறும் சுமார் 10 ஆயிரம் பேர் புற்று நோயினால் உயிரிழப்பதாகவும் பணியகத்தின் வைத்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் கூறினர்.

இதேவேளை, புற்றுநோய்க்கு உள்ளானவர்கள் இறுதிக் கட்டத்தில் சிகிச்சைக்காக வைத்தியர்களை நாடி வருவதே வைத்தியசாலைகளிலிருந்து தமக்கு கிடைக்கும் பொதுவான முறைப்பாடு எனவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

புற்றுநோய் தவிர்க்கப்பட முடியாத போதிலும் சரியான நேரத்தில் உரிய சிகிச்சை முறையை ஆரம்பிப்பதன் மூலம் மரணத்தை தள்ளிப் போட முடியும். ஆகையினால், புற்றுநோய்க்கு ஆளான ஒருவர் இனிமேல் தன்னால் எதுவுமே செய்ய இயலாது என்ற எணணத்தை கைவிட வேண்டும்.

தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன சிகிச்சை முறைகள் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதனால் எம்மால் நோயாளிகளை முன்னரை விடவும் அதிகமாகவே குணப்படுத்த முடியுமெனவும் வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

சிகிச்சையின் போது ஏற்படக்கூடிய உருவமாற்றம், தலைமயிர் கொட்டுதல், உடல் இளைத்தல் ஆகிய அனைத்தும தற்காலிகமானவையேயாகும். குறுகிய காலத்தில் அவர் மீண்டும் பழைய தோற்றத்தை பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆகையினால் சமூகத்திற்கு வெட்கப்பட அல்லது அஞ்சியோ சிகிச்சைகள் ஆரம்பிப்பதனை காலம் தாழ்த்தவோ அல்லது தவிர்ப்பதோ பிழையான கொள்கையெனவும் புற்றுநோய் குணப்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள வலியுறுத்தினர்.

இதேவேளை, 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பெண்களும் தமது பிரதேச செயலகத்திலுள்ள மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்தில் இலவசமாக முன்னெடுக்கப்படும் முழுமையான உடல் மருத்துவ பரிசோதனைக்கு கட்டாயமாக சமுகமளிக்க வேண்டுமெனவும் வைத்தியர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதன் மூலம் மார்பக மற்றும் கருப்பை புற்றுநோய்களை தவிர்த்துக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர்.

பெப்ரவரி 04 ஆம் திகதி உலக புற்றுநோய் தினமாகும். அதனை முன்னிட்டு இலங்கையில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் செய்தியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நேற்று சுகாதார கல்விப் பணியகத்தில் நடைபெற்றது. இதன் போதே வைத்திய அதிகாரிகள் மேற்படி விளக்கமளித்தனர். (அ-2)

## இலங்கை மத்திய வங்கி வட பிராந்தியத்தின் முன்மாதிரி

இந்த நாட்டின் நிதி அமைப்புகளின் தலைமையகமாக விளங்குவது இலங்கை மத்திய வங்கியாகும்.

நாணய வெளியீடு, அபிவிருத்தி உள்ளிட்ட முக்கியமான பணிகள் இலங்கை மத்திய வங்கியின் கைகளிலேயே உள்ளன.

எனினும் யுத்த கால சூழ்நிலையில் இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்தித் திட்டங்கள் வட மாகாணத்தை வந்தடையவில்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

போருக்குப் பின்னர் மத்திய வங்கியின் வட பிராந்திய அலுவலகம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு கடமையாற்றும் இளம் அதிகாரிகள்; அபிவிருத்தி, சுயதொழில் முயற்சி என்ற நோக்கில் நல்ல பணிகளை முன்னெடுத்து வருவது உண்மையில் பாராட்டுக்குரியதாகும்.

ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியாகவேண்டும் என்ற சிந்தனை இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்தியக் கிளையிடம் இருப்பது வரவேற்கப்படவேண்டும்.

இங்கிருக்கக் கூடிய அதிகாரிகள் வட மாகாணத்தின் அவல நிலையை தரவு ரீதியாக் புரிந்து வைத்துள்ளனர். அதேநேரம் அவர்களிடம் மனிதாபிமானமும் மக்கள் சமூகத்திற்கு தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும் என்ற உணர் நிலையும் இருப்பதன் காரணமாக அவர்கள் நல்ல பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக வட பகுதியில் பசும்பால் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு மாடுவளர்ப்புத் திட்டத்திற்கு கடன் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

மாட்டு வளர்ப்புக்கு வட புலம் மிகவும் உகந்த இடம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதிலும் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் மாடு வளர்ப்புத் திட்டத்தைப் பாரிய திட்டமாக முன்னெடுக்க முடியும்.

எனினும் அதற்கான வழிகாட்டல்கள், ஆலோசனைகள், உதவிகள் எங்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை பால் உற்பத்தி மிகவும் குறைந்த அளவைக் கொண்டுள்ளது.

ஒரு காலத்தில் தமிழர் தம் வீடுகள் தோறும் பசு மாடுகள் வளர்க்கப்பட்டன. பசுக்களை தெய்வமாக வழிபட்ட நம் மக்கள் அதுவே தங்கள் நிறைவான செல்வமாகவும் கருதினர்.

பசும்பால் நிறை உணவு என்பதன் காரணமாக பசுமாடு வளர்ப்பவர்கள் நல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர்.

எனினும் இன்றைய சமகாலத்தில் மாடு வளர்ப்பு கௌரவக் குறைவு என்றாகிவிட புட்டிப்பால் மாக்களின் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்த வண்ணம் உள்ளன.

சில வேளைகளில் பால்மா பைக்கற்றுகள் இல்லை என்ற நிலைமை கூட திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்றன.

சில வேளைகளில் பால்மா பைக்கற்றுகளில் நம் உடலுக்கு ஆரோக்கியமற்ற பதார்த்தங்களும் கலந்துள்ளதான தகவல்கள் எங்களின் எதிர்காலத்துக்கு பாதிப்பாக அமையக் கூடியது.

எனவே, இவற்றுக்கு எல்லாம் ஒரே தீர்வு குறைந்தது வீட்டுக்கு ஒரு பசுவையேனும் வளர்ப்பதாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய அலுவலகம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு பசு மாடுகளை வளர்க்கும் திட்டங்களை ஊக்குவிப்பது வடபுலத்தின் பொருளாதாரத்திற்கும் வேலைவாய்ப்புக்கும் கணிசமாக உதவும்.

இத்திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்த அனைவரும் முன்வர வேண்டும்.

## தீப்பற்றி எரிந்தது சவுக்கம் காடு

(தும்பளை)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியிலுள்ள சவுக்கம் காட்டு பிரதேசத்தில் திடீரென தீப்பற்றியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் தீப்பற்றியுள்ளதாக மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு கிடைத்த தகவலையடுத்து அவர்கள் மருதங்கேணிப் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு வந்த இராணுவத்தினரும் பொதுமக்களும் சேர்ந்து தீயை அணைத்துள்ளனர்.

தீப்பற்றி எரிந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. (அ-9-19)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொண்டு சிறப்பிப்பர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை திருமதி சித்ரா குருகுலராஜா வழங்குவார். (அ-2)

## சட்டமாணிக் கற்கைக்கான தெரிவுப் பரீட்சை இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் சட்டமாணி பட்டக்கற்கை நெறி 2013/2014 கல்வியாண்டிற்கான மாணவர்களை தெரிவு செய்வதற்குரிய தெரிவுப்பரீட்சை இன்று சனிக்கிழமை பி.ப 1 தொடக்கம் 3 மணி வரை பின்வரும் பரீட்சை மண்டபங்களில் நடைபெறவுள்ளது என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இராமநாதன் மண்டபம்-யாழ்.பல்கலைக்கழகம், கலைபீட மண்டபம்-யாழ்.பல்கலைக்கழகம், புதிய கலைப்பீட மண்டபம்-யாழ்.பல்கலைக்கழகம், முகாமைத்துவ மண்டபம் I-யாழ்.பல்கலைக்கழகம், முகாமைத்துவ மண்டபம் II-யாழ்.பல்கலைக்கழகம் இலங்கைத்திறந்த பல்கலைகழக யாழ். பிராந்திய நிலைய பரீட்சை மண்டபங்கள் ஆகியவற்றில் நடைபெறும். (அ-2)

## மயக்க மருந்து தெளித்து திருட்டு; புலோப்பளையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டின் ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் ஏமாற்றத்துடன் சிறுதொகைப்பணத்தை மட்டும் திருடிக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இரவு புலோப்பளை கிழக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வீட்டின் உள்ளவர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த சமயம் பின்புற ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு தூக்கத்தில் இருந்தவர்கள் மீது மயக்க மருந்தைத் தெளித்து விட்டு அறையினுள் நுழைந்துள்ளனர்.

அறையினுள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த அலுமாரிகள் மற்றும் ஏணைய பொருட்கள் அனைத்தையும் சல்லடை போட்டு தேடியுள்ளனர்.

எதுவும் கிடைக்காத நிலையில் ஒரு சிறு தொகைப்பணத்துடன் வீட்டாரின் அடையாள அட்டைகளை எடுத்துக் கொண்டு வெளியேறி அவற்றை வீட்டின் வெளிக்கதவில் இருந்த ஒழுங்கையின் சிறு வீதியில் விட்டுச் சென்றுள்ளனர். (அ-2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### அகம்பாவத்திலிருந்து விடுதலை

அகம்பாவத்திலிருந்து நாம் விடுதலை அடைந்த நிலையே இது ஆகும். அகம்பாவம் ஆறு குணங்களை உடையது. அவையாவன: நானே சரி, நீதான் தவறு, ஆதிக்கம் செய்தல், ஆதிக்கப்படுவதற்கு மறுத்தல், மறைத்தல், பிழைப்பு. இத்தகைய குணங்கள் இல்லாதிருப்பதே அகம்பாவத்திலிருந்து விடுதலையாகும். இந்தக் குணங்கள் எல்லா உறவு முறைகளிலும் குறுக்கிட்டுக் கெடுத்துவிடும். இத்தகைய குணங்களே கர்மாவின் தொடர்ச்சிக்குப் பொறுப்பாகும். நாம் அகங்காரத்தோடு இருந்தால் வாழ்க்கையின் பாடங்களைப் படிக்கிற நிலையில் நமது மனது இருக்காது.

அகம்பாவத்திலிருந்து விடுதலையே நமது ஆன்மீகப் பயணத்தின் முதற்படியாகும். இத்தகைய விடுதலைக்குப் பின் வெளித்தோன்றும் பணிவும் நன்றியும்·சரணாகதியும் இங்கே அடிப்படை குணங்களாக இருக்கும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தைரியமாக இரு



- அறியாமையால் அச்சம் உண்டாகிறது. அச்சம் துன்பத்திற்கு வழிவகுக்கிறது.
- நிமிர்ந்த நெஞ்சுடன் தைரியமாகப் போராடுங்கள்.
- பணியின் முழுப் பொறுப்பையும் உங்கள் மீது சுமத்திக் கொள்ளுங்கள்.
- துணிவுடன் செயலாற்றுங்கள். உங்களுக்குரிய விதியை வகுத்துக் கொள்வது நீங்கள் தான் என்பதை உணருங்கள்.
- ஒழுக்கம், அன்பு, அமைதி உள்ளவர்களைளுய இந்த மண்ணுலகம் வேண்டுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வங்கப்புலியை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி



பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றிவரும் இலங்கை அணி, தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது.

ஷேரே பங்களா மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பித்த இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சார்பாக முஷ்பிக்கூர் ரஹீம் 61 ஓட்டங்களையும் ஷகிப் அல் ஹசன் 55 ஓட்டங்களையும் சொஹக் கஸி 42 ஓட்டங்களையும் ஷம்சுர் ரஹ்மான் 33 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 232 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஷமின்ட எரங்க 04 விக்கெட்டுக்களையும் சுரங்க லக்மால் 03 விக்கெட்டுக்களையும் ரங்கன ஹேரத் 02 விக்கெட்டுக்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 2 விக் கெட்டுகளையும் பெற்றனர்.

தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்தன ஆட்டம் இழக்காமல் 203 ஓட்டங்களையும் கௌஷால் சில்வா 139 ஓட்டங்களையும் கித்துருவன்



விதானகே ஆட்டம் இழக்காமல் 103 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 86 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார 75 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 06 விக்கெட்டுக்களை இழந்து 730 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஷகிப் அல் ஹசன் 03 விக்கெட்டுக்களையும் சொஹக் கஸி 02 விக்கெட்டுக்களையும் அல் அமின் ஹொசைன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியின் மொமினுல் ஹக் 50 ஓட்டங்களையும் அல் அமின் ஹொசைன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும் நசீர் ஹொசைன 29 ஓட்டங்களையும் பெற, அவ்வணி 250 ஓட்டங்களுக்கே ஆட்டம் இழந்தது. இதன்படி அவ்வணி ஓர் இன்னிங்ஸ், 248 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக டில்ருவான் பெரேரா 05 விக்கெட்டுக்களையும் சுரங்க லக்மால் 3 விக்கெட்டுக்களையும் ரங்கன ஹேரத், ஷமின்ட் எரங்க இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இலங்கையின் மஹேல ஜெயவர்தன தெரிவானார். (க)





சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை அதிபர் நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்- நிகழ்வின் பிரதம விருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சேது விபுலானந்தா (ஸ்கந்தவரோதயன்) கலந்து கொண்டார். விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் வெற்றி பெற்ற அணிக்கான கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (க-23)

## இன்றைய போட்டிகள்

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

முதல் நிகழ்வாக ஆண்களுக்கான எல்லேப் போட்டி கள் இடம்பெறவுள்ளன. இன்று காலை 7 மணிக்கு ஆண்களுக்கான எல்லேப் போட்டிகள் அல்வாய்மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளன.

முதலில் ஆண்களுக்கான கிரிக்கட் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

8.00மணிக்கு பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே பதிவு பெற்ற இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்று மாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மனோறாஜ் கேட்டுள்ளார். (க-23)

(மானிப்பாய்)

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு பெற்ற இளைஞர் கழகங்களிற்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் ஆரம்ப மாகியுள்ளன.

இதன் ஒரு அங்கமாக ஆண் பெண் இருபாலாருக்குமான கரம் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன.

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு பெற்ற இளைஞர் கழகங்களின் கரம் அணிகளை குறித்த நேரத்தில் தவறாது சமுகம் தருமாறு நல்லூர் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் இ.யுகராஜ் கேட்டுள்ளார். (க-23)

அளவெட்டி கிழக்கு கும்பழை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பழை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன.

இன்று இடம்பெறவுள்ளபோட்டியில் மடம் வைகறை அணியை எதிர்த்து தையிட்டி வள்ளுவர் அணி மோதவுள்ளது. (க-23)

## வருடாந்த விளையாட்டு விழா

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்டப் போட்டிகளை நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் இம்மாதம 3ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே கழகத் தலைவர் மற் றும் செயலாளர் ஆகியோர் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகம் தந்து விளையாட்டு நிகழ்வுகளை சிறப்புற நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு கரவெட்டி பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-60)

## மகாஜனாக் கல்லூரியின் வீதியோட்ட நிகழ்வு

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வீதியோட்ட நிகழ்வு கடந்த புதன கிழமை கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இம்மரதன் ஓட்ட நிகழ்வில் ஆண்கள் பிரிவில் ஜே.ஜெனார்த்தன் (முதலாமிடம்), செ.பகீரதன் (இரண்டாமிடம்), ஜெறோம் (மூன்றாமிடம்) பெண்கள் பிரிவில் பா.சாணு (முதலாமிடம்), த.மதுசா (இரண்டாமிடம்), ச.சரண்யா (மூன்றாமிடம்) ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய எஸ்.சிவகரன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் துளசிதாசன், பழைய மாணவர் சங்க உறுப்பினர் எஸ்.சிறிதரன், பழைய மாணவனும் வலி.வடக்கு பிரதேசசபை உப தவிசாளருமாகிய சஜீவன் ஆகியோர் இவ்வீதியோட்ட நிகழ்வில் கலந்து கொண்டார்கள். (க-21)

வலம்புரி SPORTS

விளையாட்டுச் செய்திகள்

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

கரவெட்டி கல்வி கோட்டத்திற்குட்பட்ட விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் என்.பாஸ்கரன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-10)

புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இலலமெய் வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் எம்.அனந்தேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-10)

புலோலி புற்றளை மகா வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலய மைதானத்தில் கல்லூரி அதிபர் ஆறுமுகம் சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புற்றளை மகாவித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் முருகேசு அனந்தேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.(கு)

நெல்லியடி மெ.மி.த.க. பாட சாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உல்லியனொல்லை ஆலய முன்றலில் பாடசாலை முதல்வர் நடராஜா தேவராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் ராஜேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவம்ஸம் செய்தது நியூசிலாந்து அடி பணிந்தது இந்தியா

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நேற்று வெலிங்ரனில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களை குவித்தது.

2 விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களுடன் தடுமாறிய அவ்வணி சார்பாக 3ஆவது விக்கெட்டுக்காக கேன் வில்லியம்சன், றோஸ் ரெய்லர் இருவரும் 151 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். அதன் பின்னர் களமிறங்கிய வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அவ்வணி 303 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக றோஸ் ரெய்லர் 106 பந்துகளில் 102 ஓட்டங்களையும் கேன் வில்லியம்சன் 91 பந்துகளில் 88 ஓட்டங்களையும் ஜேம்ஸ் நீஷம் 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

**நியூசிலாந்துக்கு எதிரான இறுதிப் போட்டியிலும் இந்திய அணி 87 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்துள்ளது.**



பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக வருண் ஆரோன் 2 விக்கெட்டுக்களையும் மொஹமட் ஷமி, புவனேஷ்வர் குமார், விராட் கோலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

304 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்று 87 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

8 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, 3 விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்களுடன் தடுமாறியது. அதன் பின்னர் விராட் கோலி, தோனி இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, 4 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களுடன் போராடியபோதிலும், விராட் கோலியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்ந்தன.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராட் கோலி 78 பந்துகளில் 82 ஓட்டங்களையும் மகேந்திரசிங் தோனி 72 பந்துகளில் 47 ஓட்டங்களையும் புவனேஷ்வர் குமார் 25 பந்துகளில் 20 ஓட்டங்களையும், அம்பத்தி ராயுடு 40 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக அறிமுக வீரர் மற் ஹென்றி 4 விக்கெட்டுக்களையும் கைல் மில்ஸ், கேன் வில்லியம்சன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் நேதன் மக்கலம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக நியுசிலாந்து அணியின்றோஸ் ரெய்லர் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட இத் தொடரின் 3ஆவது போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில், இத்தொடரை நியூஸிலாந்து அணி 4 - 0 என்ற க்ணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (க)

## இலங்கைக்கு எதிரான...

திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் உள்ளிட்ட குழுவினர்க்கிடையில் கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்க நாட்டின் தூதுவர் இல்லத்தில் பிற்பகல் 4.30 மணிதொடக்கம் 5.30 மணிவரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத் தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் வலம்புரிக்கு மேலும் தெரிவிக்கையில்,

**இம்முறையும் பிரேரணை**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச்மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. அமெரிக்காவினால் ஏற்கெனவே இந்தக்கூட்டத்தொடரில் இரண்டு பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இம்முறையும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ளது.

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு ஐந்து வருடங்களை எட்டியுள்ள நிலையிலும் வடக்கு கிழக்கில் பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாத நிலையிலேயேயுள்ளது. இராணுவத்தின் தேவைக்காக தமிழ்மக்களின் பூர்வீக நிலங்கள் சுவீகரிக்கப்பட்டுவருவதோடு அதில் அந்தப்பிரதேசத்தை சாராத சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுவருகின்றனர்.

இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களில் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதனைவிட வடக்கு கிழக்கில் தமிழ்பெண்களுக்கு எதிரான வன்முறைகள் துன்புறுத்தல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு வடக்கு - கிழக்கில் பல பிரச்சினைகள் இன்றும் தீர்த்து வைக்கப்படாமல் உள்ளது.

**விசாரணையில்லை**

இறுதிக்கட்டப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டதற்கும் இங்கு இடம்பெற்ற அநீதிகளுக்கும் உரிய விசாரணை நடத்தப்படவில்லை. மன்னார் மனிதப்புதைகுழியில் தோண்டத்தோண்ட வெளிவரும் மனித எலும்புக்கூடுகள் தொடர்பிலும் சரி இங்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற உயிரிழப்புகள் தொடர்பிலும் சரி விசாரணைகள் இடம்பெறவில்லை.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கூட எந்தவிதமான முன்னேற்றங்களையும் அரசாங்கம் செய்யவில்லை. இதனைவிட சர்வதேச நாடுகளின் பரிந்துரைகளையும் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த தயாராகயில்லை.

**அரசியல் தீர்வு**

தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் நிரந்தர அரசியல் தீர்வினை வழங்க இலங்கை அரசாங்கம் தயாராகயில்லை. தீர்வு குறித்து எந்தவிதமான முன்னேற்றங்களையும் அரசு செய்யவில்லை. தமிழ்மக்களுக்கு தீர்வு வழங்க அரசுதயாராகயில்லை என்பதையே இது உணர்த்துகின்றது.

**மதிக்கவில்லை**

வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நடைமுறைபடுத்தியதாக மார்தட்டும் இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களின் ஆணையை மதிக்கவில்லை. சட்டத்தையும் மதிக்கவில்லை. இராணுவத்தின் தலையீடுகள், துணையுடன் தன்னால் முடிந்தவரை முயற்சித்தும் வடக்குத்தேர்தலில் படுதோல்வியடைந்த அரசு வடக்குமாகாணசபைக்கு சட்டத்திலுள்ளதைக்கூட வழங்கத் தயாரில்லை.

வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் நியமனத்தில் கூட அரசாங்கம் முரண்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. சிறிய விடயத்தில்கூட அரசாங்கம் இணக்கம் தெரிவிக்க மறுத்து வருகின்றது.

**விசாரணை வேண்டும்**

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் மீது சுயாதீனமான, பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். இதனைவலியுறுத்தியதாக ஐ.நா.மனித உரிமை கூட்டத்தொடரில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை அமையவேண்டும். இவ்வாறு பல விடயங்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இந்தச்சந்திப்பின்போது வலியுறுத்தியிருந்தது.

**வலுவானது வரும்**

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதோடு இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இம்முறை ஐ.நா.மனித உரிமை கூட்டத்தொடரில் அமெரிககாவினால் வலுவான பிரேரணை கொண்டுவரப்படும் என்பதில் எவ்விதமான மாற்றமுமில்லை என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் கூட்டமைப்பிடம் உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (எ-6)

## இலங்கையின் விடயத்...

இலங்கை இழந்துவிடும் என்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் அச்சம் அதிகரித்துவருவதாக அமெரிக்காவின் உதவி வெளியுறவுச் செயலர் நிஷா பிஸ்வால், தம்மிடம் கூறியதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரின் வடுக்களை ஆற்றுவதில் இலங்கை வேகமாக இயங்கவில்லை என்றும், இந்த ஆறாத வடுக்கள் மீண்டும் மோதல்களை தோற்றுவிக்கக்கூடும் என்றும் அமெரிக்க உதவி வெளியுறவுச் செயலர் சுட்டிக்காட்டியதாக வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இலங்கையில் மீண்டும் மோதல் ஏற்படுவதை மக்கள் வரும்பவில்லை என்றும் அமெரிக்காவின் செயற்பாடு அடுத்தவர் விடயத்தில் மூக்கை நுழைக்கும் வேலை என்றும், ஊருக்கு உபதேசம் செய்வது என்றும் கூறியுள்ளார்.

இலங்கைக்காக சுட்டிக்காட்டப்படும் ஏற்பாடுகள் மற்ற நாடுகளின் விவகாரத்தில் கைக்கொள்ளப்படுவதில்லை என்றும், இலங்கை சமமாக நடத்தப்படவில்லை என்றும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால், இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரல் எதனையும் அமெரிக்கா கைக்கொள்ளவில்லை என்றும், அமெரிக்க அரசு அடித்தளமாகக் கொண்டுள்ள சில விடயங்களில் அமெரிக்கா உறுதியாகத்தான் நின்றாக வேண்டும் என்றும் பிஸ்வால் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கிய பிரச்சிசனைகளைத் தீர்ப்பதற்கு இலங்கையின் சொந்த பொறிமுறையைக் கையாளுமாறு அமெரிக்கா கோரிவந்தது. ஆனால், இலங்கை அதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கவலைகள் உள்ளன என்றும் அமெரிக்க பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மீது விழுந்துள்ள சர்வதேசத்தின் பார்வை பரந்துபட்ட பொதுநலனையோ அல்லது விழுமியங்களையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல என்றும் அது அதிகாரம், பணம் மற்றும் வாக்குகளை நோக்காகக் கொண்டது என்றும் அமெரிக்க உதவி வெளியுறவுச் செயலரிடம் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது அணுகுமுறையில் நடுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஜீ.எல் பீரிஸ் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சு அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

## உறுதிமொழிகளை...

திபதி மகிந்த ராஜபக்ஷ, முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கூறியிருந்தாலும் இதுவரை அப்படியான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. எனினும் எமது நோக்கம தொடர்பில் நாங்கள் தொடர்ந் தும் அவதானத்துடன்இருந்து வருகிறோம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்பரிந்துரைகள்மற்றும்கடந்த ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அரசாங்கம் இதுவரை அமுல்படுத்தவில்லை.

வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்ல தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதாக ஜனாதிபதி அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் உறுதியளித்தார்.

அந்த உறுதிமொழியை கூட அவர் இதுவரை நிறைவேற்றவில்லை. மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதாக வடக்கு மாகாண சபை தெரிவித்துள்ளது.

அதேபோல் வடக்கு மாகாண சபையின் சகல தேவைகள் குறித்து மத்திய அரசாங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும்வடக்குமாகாண மக்களின் பாரம்பரிய நிலங்கள் கூட அரசாங்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுக்காக...

பெற்ற காலத்தில் கனரக ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை என அரசாங்கம்எடுத்த தீர்மானத்தை கூட எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டும் என்று கூறிய ஜே.வி.பி இன்று தெரிவித்து வரும்கருத துக்களின் நோக்கம் என்ன?

ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவில் விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்து வதே ஜே.வி.பியின் நோக்கம்.

நாங்கள் தான் யுத்தம் செய்ய வேண டும் என்று ஜனாதி பதிக்கு கூறினோம என ஜே.வி.பி ஒரு காலத்தில் தெரிவித்து வந்தது.

எனினும் மன் னார் புதை குழி குறித்து கருத்து வெளி யிட்டு வரும் ஜே.வி.பி அந்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட தமிழர்கள் என்று தெரி வித்துள்ளது என் றார். (எ-11)

## மன்னார் மனிதப் புதை...

மைவாக மன்னார் மாவட்ட பொது வைத் தியசாலையில் ஒதுக் கப்பட்ட ஒரு இடத் தில் நேற்று முன் தினம் வியாழக் கிழமை வரை 23 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டு வைக்கப்பட்டுள் ளது.

இந்த நிலையில் ஏற்கெனவே கண்டு பிடிக்கப்பட்ட மேலும் 5 எலும்புக்கூடுகள் நேற்று வெள்ளிக் கிழமை மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் வைத்தி யசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப்பட் டுள்ள 54 மனித எலும்புக்கூடுகள் மற் றும் மனித எச்சங் களில் இது வரை 28 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத தியசாலையில் பாது காப்பாக வைக்கப் பட்டுள்ளது.

மீண்டும் குறித்த புதைகுழியின் அகழ்வுப்பணிகள் எதிர்வரும் பெப்ர வரி மாதம் 10 ஆம் திகதி மன்னார் நீத வான் ஆனந்தி கன கரட்ணம் முன்னி லையில் இடம் பெற வுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ-11)

## கடும்...

டிக்காட்டியுள்ளார். தமிழ் சமூகத்திற்கு ராஜபக்ஷ அரசாங் கம் வழங்கிய வாக் குறுதிகள் இன்ன மும் நிறைவேற்றப்ப டவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் உள் நாட்டுப் பிரச்சினை களை வெளிநாடு களில் பேசுவதாக வும், உலகம் முழு வதும் விஜயங்களை மேற்கொண்டுமுறை பாடு செய்வதாகவும் அரசாங்கம் குற்றம் சுமத்தி வருகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும், யாழ்ப் பாணத்திற்கு சென்று தமிழ் மக்களின் பிரச் சினைகளை பார்வை யிடாது வெளிவிவ கார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீரதுங்க போன் றோரும் உலக நாடு களுக்குச்சென்றுதமிழ மக்களுக்கான தீர்வுத் திட்டம் குறித்து பேசி வருவதாகத் தெரிவத துள்ளார். 2009-ம ஆண்டு மே மாதம் ஐக்கிய நாடுகள்அமைப் பின் பொதுச் செயலா ளர் பான் கீ மூனுக்கு அளிக்கப்பட்ட வாக் குறுதியின் அடிப்படை யில், 13-ம் திருத்தச் சட்டத்தை முழுமை யாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார். (எ-11)

## ஆவா குழு...

கொள்ளப்பட்டது.

இதன்போது சந் தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான மு.றெமீடியஸ்,சர்மினி விக்னேஸ் வரன், வி. திருக்குமரன் ஆகியோர் ஆஜராகி யிருந்தனர்.

இவ் வழக்கின் சந் தேக நபர்கள 11 பேரில 9 பேரை இவ் 3 சட் டத்தரணிகளுமே பிணையில் விடுவிக்க வாதாடினர்.

நேற்றைய தினம குறித்த வழக்கில் பிணை விண்ணப் பம் கோரப்பட்டபோது கோப்பாய் பொலிஸ் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்காததனை யடுத்து மன்று 9 பேரையும் பிணையில செல்வதற்கு அனும தித்தது.

கோப்பாய் பொலி ஸார் இவ் வழக்கிலி ருநது திடீரென பின் வாங்கியமை பல ரிடையே பலத்த சந் தேகங்களினை ஏற் படுத்தியுள்ளன.

குறித்த வழக்கு மீண்டும் எதிர்வரும் 13ஆம் திகதி எடுத துக்கொள்ளப்படவுள் ளது. (அ-4)


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English (2 Months)**

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**EVENING & WEEKEND CLASSES STARTS ON**

01-02-2014 @11.30 - 02.30PM | 02-02-2014 @02.00 - 05.00PM | 03-02-2014 @03.00 - 05.00PM

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(C-6388)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA (AF)**

பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**யார் AF இல் FRENCH படிக்க முடியும்?**

திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய, தொடர்ந்து French படிக்க / கல்விகற்க செல்வோர், French கற்கவிரும்புவோர். உலகில் French கற்பிப்பதற்கு French அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரேஒரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற...
- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4... மேலும் Audio CDs (முற்றிலும் இலவசமாக பயிற்சி பெறலாம்)
- வகுப்பறையில் வழங்கப்படும் பாடப் பிரதிகள் (Photocopies) முற்றிலும் இலவசம். மாணவர்களுக்காக பிரமாண்டமான நூலக வசதிகள், DVD s...
- அதியுயர் தகைமைகளையுடைய பல ஆசிரியர்களை கொண்ட ஒரே நிறுவனம் எமதே. வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் இங்கு படித்து செல்கிறார்கள்
- **Exams, Certificates and International Diplomas**
  1. Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE Course)
  2. Elementary level - 2 (4 Months, 60 Hours, CERTIFICATE Course)
  3. International Diplomas : DELF A1, A2

எங்கு French படித்தாலும் DELF பரீட்சைகளை எமது AF இல் மட்டுமே எழுத முடியும். மேலும் உலகில் AF இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. யாழில் வேறு இடத்தில் எமது Branches இல்லை.

- கலை, கலாசார நிகழ்வுகளுடன் சான்றிதழ் வழங்கும் வைபவங்கள்...
- Letter in French : 6 மாதத்தினை முடிக்காதோருக்கு / Embassy க்கு (இலவசம்)
- Translations in French: பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள்.

(5463)

கவனிக்கவும் : சர்வதேச பரீட்சைகள், Certificates ஐ உலகில் AF மட்டுமே வழங்கி வருகிறது. யாழில் AF 1976 முதல் இயங்கிவருகிறது. Embassy இலும் France இலும் எமது Certificates மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.

புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவுசெய்யுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்..61,Kachcheri-Nallur Road, Jaffna 021 222 8093 (கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



**பௌதிகவியல் Classes**

2014 பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான கடந்த காலவினாக்கள்மற்றும் Theoryயுடன்கூடியபயிற்சிவகுப்புகள்

ஆரம்பம்: 01.02.2014 (இன்று) பி.ப.2.30-3.45

ஆசிரியர்: C.திவ்யன் B.Sc

BEACON வெலிங்டன் சந்தி, யாழ். நகர்.

பாட அலகுகளைத் தவறவிட்டவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்

(5496)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.